
# குமார் விதிகள்



இரா. விஜயகுமாரன்

# குமார் விதிகள்
# [ Kumar laws ]

சமுதாய சீர்திருத்த வாழ்வியல் ஆய்வு நூல்.

**இரா.விஜயகுமாரன்**

This edition first published on June, 2024 by Kumar Publications

R.Vijayakumaran has asserted his right to be identified as the author of this Work in accordance with Indian Copyright Law.

Copyright © R.Vijayakumaran. All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording, or otherwise, without the prior permission of the copyright owner.

www.vijayakumaran.in

# பொருளடக்கம்


முன்னுரை 4

நம் சிந்தனைக்கும், செயலுக்கும் நாம் காரணம் அல்ல... 7

விதி 13

கடவுள் 20

அறிவு 31

ஏழாவது அறிவு 52

ஆறாவது அறிவு 57

# முன்னுரை

இயற்கை எனும் கடவுள் எனக்கு கொடுத்த வரத்தை (அறிவை) உலக மக்கள் அனைவரும் பெற்று பயனுற வேண்டும் என்பதற்காக இந்த புத்தகத்தை நான் எழுதி இருக்கிறேன்.

நான் உணர்வின் ஆளுமை இல்லாமல் அறிவின் ஆளுமையால் ஆறாவது அறிவின் மூலம் நான் பெற்ற அறிவை வாசகர்களும் பெற வேண்டும் என்றால், வாசகர்களும் உணர்வின் ஆளுமை இல்லாமல் அறிவின் ஆளுமையில் படித்தால் மட்டுமே நான் எழுதியிருப்பதை நீங்களும் ஆறறிவின் மூலம் அறிவாக பெற முடியும்.

நான் என்ற உணர்வின் ஆளுமை இல்லாமலும், என்னுடைய விருப்பத்தை எந்த ஒரு இடத்திலும் திணிக்காமலும், ஆய்வில் கிடைத்த முடிவை அப்படியே பதிவு செய்து இருக்கின்றேன்.

கணிதத்திற்கு சூத்திரங்கள் (ஃபார்முலா) முக்கியம் என்பது போல் வாழ்க்கைக்கு தத்துவங்கள் முக்கியம். கணிதத்தில் சூத்திரம் தவறாகிவிட்டால் மொத்த கணக்கும் தவறாகிவிடும். அதுபோல் வாழ்க்கையில் நாம் பின்பற்றும் தத்துவங்கள் தவறாக இருந்தால் வாழ்க்கையே பாழாகிவிடும்.

நான் பெற்றிருக்கும் ஆறு அறிவுகளும் வாழ்க்கையை இன்பமாக வாழ தேவையான ஆறு தத்துவங்கள்.

1. நம்முடைய சிந்தனையும், செயலும் நம் கட்டுப்பாட்டில் இல்லை.
2. விதி உண்மை.

3. விதி உண்மை என்பதால் கடவுள் இல்லை. ஆனால் கடவுளை வணங்கினால் நன்மைகள் நடக்கும்.
4. அனுபவம் தான் அறிவு.
5. அறிவை அறிவால் ஆளுமை செய்வது ஏதாவது அறிவு.
6. உணர்விலிருந்து விடுபட்டு சிந்திப்பது ஆறாவது அறிவு.

இந்த ஆறு தத்துவங்களையும் படித்து புரிந்து கொண்டு வாழப்பழகி கொண்டால் அவர்கள் அனைவரும் மகான்கள் தான்.

நாம் எதை சொன்னாலும் பலர் அதான் எனக்கு தெரியுமே என்று சொல்லிவிட்டு, உனக்குத் தெரிவதற்கு முன்பே எனக்குத் தெரியும் என்று உணர்வால் ஆறாவது அறிவை தடை செய்து விடுவார்கள்.அப்படி தடை செய்பவர்கள் ஐந்து அறிவில் தான் இருக்கின்றார்கள் என்று பொருள். நான் எழுதியிருப்பது முன்பே உங்களுக்கு தெரியும் என்று உங்களுக்கு தோணுகின்றது என்றால் நீங்கள் நான் எழுதியதை புரிந்து கொள்ளவில்லை என்று பொருள், அல்லது உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்கின்றீர்கள் என்று பொருள்.

நான் எழுதியிருக்கும் ஆறு தத்துவங்களும் புரிதல் இல்லாமல் பலரால் பல ஆண்டுகளாக நம்பப்படுவதால் நான் எழுதியதை படித்ததும் அதான் தெரியுமே என்று எண்ணுவார்கள்.
நம்பிக்கை என்பது அறியாமையின் வெளிப்பாடு !
புரிதல் என்பது அறிவின் வெளிப்பாடு !
விதி உண்மை என்று நான் எழுதியதை படித்தவுடன் விதியை நம்பியவர்கள் அதான் தெரியுமே என்று கடந்து போனால், அவர் நம்பிக்கை என்ற அறியாமையிலிருந்து விடுபட்டு புரிதல் என்ற அறிவை பெற அவரிடம் அறிவு இல்லை என்று தான் பொருள்.

இந்தப் புத்தகத்தை முழுமையாக படித்து நான் எழுதியதை அறிவாக பெற்றவர்கள் இயற்கை எனும் கடவுள் நம்மை பார்த்துக்கொண்டே இருக்கின்றது எதிர்வினைக்காக என்பதை புரிந்து பொய் சொல்லாமல், ஏமாற்றாமல், நேர்மையாக நடப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருப்பதால், இந்த புத்தகத்தை படித்து புதிய அறிவை பெற்றவர்கள் மட்டும் குரு தட்சணையாக எனக்கு ரூபாய் 10 யை என்னுடைய வங்கி கணக்கில் போடும்படி கேட்டுக் கொள்கின்றேன்.
நான் பெற்ற அறிவால் பயனடையும் அனைவரும் எனக்கு கொடுக்கும் குரு தட்சணையை நான் பணமாக பார்க்கவில்லை என்னுடைய 48 ஆண்டு உழைப்புக்கான அங்கீகாரமாக நான் பார்ப்பதால், நீங்கள் கொடுக்கும் பத்து ரூபாயை நான் மிகப்பெரிய விருதாக பார்க்கின்றேன்.

என்னுடைய புத்தகத்தை அனைவரும் படிக்கும்வகையில் இலவசமாக கொடுக்கின்றேன், படித்தோ அல்லது கேட்டோ பயனடைந்தவர்கள் மட்டும் குருதட்சணை கொடுத்தால் மகிழ்ச்சி.

# நம் சிந்தனைக்கும், செயலுக்கும் நாம் காரணம் அல்ல...

இயற்கை எனும் கடவுள் எனக்கு கொடுத்த முதல் வரம் "நம்முடைய சிந்தனை நம்முடைய கட்டுப்பாட்டில் இல்லை, இறந்தகால நிகழ்வுகளின் தொடர்வினையின் அடிப்படையில் தான் நாம் சிந்திக்க முடியும் என்ற அறிவு" இந்த அறிவை பெற்ற முதல் மனிதன் நான் என்பதால் இந்த அறிவை நான் வரமாக பார்க்கின்றேன்.

இந்த அறிவை நான் தான் முதலில் பெற்று இருக்கின்றேன் என்பதற்கு ஆதாரம், இன்று வரை நடைமுறையில் இருக்கும் உலக நீதியும், தண்டனைகளும் ஒரு மனிதனின் செயலுக்கு அவனேதான் பொறுப்பு என்ற அடிப்படையில் இருப்பதே.மேலும் விவேகானந்தர் போன்ற மகான்களும் அனைத்தும் உன்னுள்ளே தான் இருக்கின்றது. நீ நினைத்தால், முயற்சித்தால் சாதிக்க முடியும் என்றுதான் சொல்லி இருக்கின்றார்கள்.

"நீ எதை நினைக்கின்றாயோ அதுவாகவே ஆவாய்" இது விவேகானந்தர் சொன்னது.

"நீ எதை நினைக்கின்றாயோ அதுவாகவே ஆவாய், ஆனால் நீ எதை நினைக்க வேண்டும் என்பதை நீ தீர்மானிக்க முடியாது" இது நான் சொன்னது.

விவேகானந்தர் சொன்னது உண்மைதான் அந்த உண்மைக்கு பின்னால் மற்றும் ஒரு உண்மை இருக்கின்றது என்ற அறிவை என் வழியாக காலம் மனித சமுதாயத்திற்கு கொடுத்திருக்கின்றது.

நாம் இந்த உலகில் ஒரு பொருளைப் போல்தான், நம்மை வெளி சக்தி இயக்கினால்தான் நாம் இயங்க முடியும், நாம் ஒரு செயலை நினைக்க வேண்டும் என்றாலும் அதற்கும் இரத்த காலத் தொடர்போ வெளியுலக தொடர்போ இருக்க வேண்டும். ஒரு தொடர்பும் இல்லாமல் எதை ஒன்றையும் நாம் சிந்திக்கக் கூட முடியாது.
நம்முடைய சிந்தனையும், செயலும் ஐந்து புலன்களால் நாம் பெற்றிருக்கும் அறிவையும், தகவலையும் அடிப்படையாகக் கொண்டு இருக்கும். அல்லது வெளியுலக தொடர்போடு இருக்கும்,அல்லது  பசி, வலி, தேக இன்பம், நோய் போன்ற மெய் உணர்வின் காரணத்தாலும் நம்முடைய சிந்தனை இருக்குமே தவிர வெளியுலக தொடர்போ இறந்த கால தொடர்போ இல்லாமல் நம்மால் சுயமாக எதை ஒன்றையும் சிந்திக்கவே முடியாது.

மெய், இறந்த காலத்தில் பெற்றோர்களால் உருவாக்கப்பட்டது. நம்முடைய அறிவும், உடலும் தொடர்வினைத் தத்துவத்தால் நாம் பெற்றது.

நம் பிறப்பும் நம் கட்டுப்பாட்டில் இல்லை !
நாம் பெரும் அறிவும் நம் கட்டுப்பாட்டில் இல்லை !
நம்முடைய சிந்தனையும் நம் கட்டுப்பாட்டில் இல்லை !
நம்முடைய செயலும் நம் கட்டுப்பாட்டில் இல்லை !

நம்முடைய சிந்தனை நம் கட்டுப்பாட்டில் இருப்பதைப் போன்ற தோற்றம் ஒரு மாயை. இதை அனைவராலும் புரிந்து கொள்ள முடியாது. என்னுடைய சிந்தனை என் கட்டுப்பாட்டில் இல்லை, விதியின் கட்டுப்பாட்டில் தான் இருக்கின்றது என்பதை நாம் உணர வேண்டும் என்றால் சிந்தனையின் எல்லை வரை சென்றால்தான் நாம் ஒரு எல்லைக்குள் தான் சிந்திக்க முடியும் என்பது புரியும்.

நோபல் பரிசு பெற்ற அறிவியல் ஆராய்ச்சியாளர்களின் சிந்தனையும், செயலும் கூட விதியின் எல்லைக்கு உட்பட்டு தான் இருக்கும். சுயமாகவோ, எல்லையை மீறியோ சிந்திக்கவே முடியாது. பிறப்பு இல்லாமல் இறப்பு இல்லை என்பது போல் இறந்த கால தொடர்பு இல்லாமல் சிந்தனையும் இல்லை.

ஞானியாக இருந்தாலும் சரி, அறிவியல் மேதையாக இருந்தாலும் சரி, தன்னைக் கடவுளின் அவதாரம் என்று கூறுபவர் என்றாலும் சரி, பாமர மனிதனாக இருந்தாலும் சரி, வெளியுலக தொடர்போ, கடந்தகாலத் தொடர்போ இல்லாமல், சுயமாக எதை ஒன்றையும் சிந்திக்கவே முடியாது. நம்முடைய சிந்தனைகள் அனைத்தும் வேறொரு நிகழ்வின் மூலம் கிடைத்த சிந்தனைதான். சுயமாக நான் இதைச் சிந்தித்தேன் என்று யார் ஒருவரும் கூற முடியாது. நம்முடைய சிந்தனைக்குக் கூட நாம் காரணம் அல்ல என்பதால் நம்முடைய செயலுக்கும் நாம் காரணம் அல்ல.

நாம் இருக்கின்ற இடத்தில் இருந்து பூமியைப் பார்த்தால் பூமி தட்டையாகத் தான் தெரியும். அறிவு பூர்வமாகவும், உயர்ந்த நிலைக்கும் சென்று பூமியைப் பார்த்தால்தான் பூமி உருண்டையாகத் தெரியும், இதுபோல் தான், குறுகிய

வட்டத்திற்குள் நாம் இருந்து கொண்டு நம்மைப் பார்த்தால் நாம் செய்கின்ற செயல்கள் அனைத்தும் நம்மால்தான் நடக்கின்றது என்பது போல் தோன்றும். ஆனால் உண்மையில் நம் எல்லாச் செயலுக்கும் இதற்கு முன் நடந்த செயல்களே காரணம்.

தண்ணீர் தானாகச் சூடாகாது, வெளியிலிருந்து ஒரு சக்தி அதைச் சூடுபடுத்தினால்தான் சூடாகும்.

ஒரு பந்து தானாக உருளாது, வெளி சக்தியால் தான் அது உருளும்.பந்தின் மீது காற்று அடித்தால் பந்து உருளும், காற்று எப்படி அடிக்கும்? வெப்பத்தின் சுழற்சியால் காற்று சுழன்று கொண்டிருக்கிறது.
இந்தக் காற்று எப்போது சுழல ஆரம்பித்தது, பல கோடி ஆண்டுகளுக்கு
முன், அப்படி என்றால் இப்போது இந்த பந்து நகர்வதற்குப் பல கோடி
ஆண்டுகளுக்கு முன் காற்றில் ஏற்பட்ட சுழற்சி தான் இன்று காரணம்.

நாம் செய்கின்ற செயல், நம் வாழ்க்கை அனைத்துக்கும் நாம் இதற்கு முன் செய்த வினை, நம் முன்னோர்கள் செயல், தாவரங்களின் செயல்பாடு மற்றும் பூமியில்வேறு சக்தியின் தாக்கம்,  ஆகியவையே அடித்தளம். இதன் அடிப்படையில்தான் நம்முடைய செயல் இருக்கும். நாம் தனித்து இயங்கவே முடியாது. நாம் செய்கின்ற செயல்கள் அனைத்திற்கும் தொடர்வினைதான் அடிப்படையாக இருக்கின்றது, இது தான் அறிவியல் தத்துவம். இதை தான் நம் முன்னோர்கள் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்று கூறினார்கள்.

நாம் செய்கின்ற செயல்கள் அனைத்தும் இறந்த காலத்தின் தொடர்போடுதான் உள்ளது. அப்படி என்றால் எதிர்காலம் நிகழ்காலத்தின்
தொடர்போடுதான் இருக்கும்.

தொடர்வினைத் தத்துவத்தின் படி எதிர்காலத்தில் நடக்க இருப்பவை அனைத்தும் உறுதி செய்யப்பட்டவையே.

வரும் காலத்தில் நாம் எப்படி இருப்போம் என்று யாராலும் தெளிவாகக் கூறமுடியாது. ஏனென்றால் நம்மைப் பலவிதமான சக்திகள் ஆளுகின்றன. இந்த சக்தியின் கூட்டுப்பலன் எப்போது எப்படி இருக்கும் என்று யூகிக்க முடியாது.

ஒருவன் நன்கு படித்துவிட்டு நல்லவேலைக்குச் சென்றவுடன் அந்தச் செயலுக்கு எல்லாம் தான்தான் காரணம் என்று பெருமை பேசுவான், மற்றும் ஒருவன் நன்றாகப் படித்து பட்டம் பெற்றிருப்பான். ஆனால் அவனுக்கு வேலை கிடைக்காமல் மிகவும் கஷ்டத்தில் இருப்பான். அவன் இதற்கு எல்லாம் என் நேரம் சரியில்லை, நான் என்ன செய்வது என்று சொல்வான்.

தோற்றவன் சொல்வதுதான் உண்மை. அவனால் எதையும் செய்ய முடியாது. அவனைச் சுற்றியுள்ள சூழல் அவனை இயக்கினால்தான் அவன் இயங்க முடியும்.

ஒருவன் படிக்க வேண்டும் என்றால் அவன் ஆரோக்கியம் உடையவனாக இருக்க வேண்டும். அதற்கு அவன் பெற்றோர்கள் ஆரோக்கியமானவர்களாக இருந்திருதால்தான் இவன் ஆரோக்கியமான குழந்தையாகப் பிறந்திருந்திருப்பான். நல்ல உணவு, பள்ளி, நண்பர்கள், ஆசிரியர்கள், சூழல் அனைத்தும் கிடைத்தும் படிக்க வேண்டும் என்ற எண்ணம்

அவனுக்குள் வரவேண்டும். அதுவும் வெளியில் இருந்து கிடைக்கும் அனுபவத்தில்தான் ஒருவனுக்கு நல்ல சிந்தனை வரும். படித்த பிறகு வேலையில் சேர்வதற்கு, சேருகின்ற இடத்தில் ஆட்கள் தேவைப்பட வேண்டும். அதற்குப் போட்டி இல்லாமல் இருக்க வேண்டும். இப்படி அனைத்தும் வெளியுலகையே சார்ந்து உள்ளது. ஆனால் அந்த வேலைகிடைத்ததும் ஒரு மனிதன் அதற்குக் காரணம் தான்தான் என்று நினைக்கின்றான்.

தோற்றவன் தோல்விக்கு தான் காரணம் அல்ல என்று நினைப்பதும், வென்றவன் வெற்றிக்கு தானே காரணம் என்று நினைப்பதும் உணர்வின் வெளிப்பாடு.இந்த உணர்வின் அடிப்படையில்தான் உலக நீதி அமைந்துள்ளது.

நம்முடைய சிந்தனைக்கும், செயலுக்கும் நாம் காரணம் அல்ல என்ற அறிவு எப்பொழுது உலக மக்கள் அனைவரிடமும் சென்றடைகின்றதோ அப்பொழுதுதான் புதிய நீதி உருவாகும்.

# விதி

இயற்கை எனும் கடவுள் எனக்கு கொடுத்த இரண்டாவது வரம் விதியை பற்றிய அறிவு. விதி என்பதன் பொருள் மாறாதது, மாற்றத்திற்கு உட்படாதது, எது நடக்குமோ அது நடந்தே தீரும் என்ற உறுதி தன்மையை வெளிப்படுத்தும் வார்த்தை தான் விதி.

நம்முடைய சிந்தனையும், செயலும் நம் கட்டுப்பாட்டில் தான் இருக்கின்றது என்ற நம்பிக்கை எனக்கு இருக்கும் வரை நானும் மற்றவர்களைப் போல் விதியை நம்பவில்லை. விதியை மதியால் வெல்ல முடியும் என்றே நம்பினேன்.

நம்முடைய சிந்தனையும், செயலும் நம் கட்டுப்பாட்டில் இல்லை என்பதை நான் அறிந்த போது தான் விதி உண்மை என்பதை நான் புரிந்து கொண்டேன். ஒவ்வொரு அனுவின் அசைவும் தொடர்வினை தத்துவத்தின் அடிப்படையில் தான் இயங்குகின்றது. இறந்த கால நிகழ்வுகள் தான் நிகழ்கால நிகழ்வுகளுக்கு காரணம். நிகழ்கால நிகழ்வுகள் தான் எதிர்கால நிகழ்வுகளுக்கு காரணம் என்பதை அறிவியல் அறிஞர்கள் ஆய்வில் கண்டுபிடித்து விட்டார்கள். ஆனால் விதி உண்மை என்று எந்த ஒரு அறிவியல் அறிஞர்களும் சொல்லவில்லை, காரணம் மனிதனுடைய சிந்தனையால் விதியை மாற்ற முடியும் என்ற நம்பிக்கையே.

என்னுடைய ஆய்வின்படி மனிதனுடைய சிந்தனையும் தொடர்பினை தத்துவத்துக்குள்ளேயே இருப்பதால், இந்த பிரபஞ்சத்தில் ஒரு அணுவின் அசைவு முதல் அனைத்து நிகழ்வுகளுக்கும் நேற்றைய நிகழ்வுகளே இன்றைய நிகழ்வுகளுக்கு காரணமாகவும், இன்றைய நிகழ்வுகளே

நாளைய நிகழ்வுகளுக்கு காரணமாகவும் இருப்பதால் இந்த உலகில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளும் பல கோடி ஆண்டுகளுக்கு முன்பே நிர்ணயிக்கப்பட்டு விட்டது என்று அறிவியல் தெளிவுபடுத்துகின்றது. எனவே விதி உண்மை.

நம்முடைய முன்னோர்கள் வாழ்க்கை அனுபவத்தால் விதி உண்மை என்பதை உணர்ந்து இருக்கின்றார்கள், அதனால் தான் விதி என்ற வார்த்தையை உருவாக்கி இருக்கின்றார்கள். விதி எதனால் உண்மை என்பதை புரிந்து கொள்ளாததால் தான் மனிதனுக்குள் ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தி மண்ணுக்கும், பொண்ணுக்கும் ஆசைப்பட்டு பல உயிர்களை பலி கொடுத்துள்ளார்கள்.

விதியை உண்மையென்று எப்போது ஒருவன் உணர்கிறானோ, அல்லது நம்புகின்றானோ, அப்போது அவன் மனதில் நான் என்ற ஆணவம் அழிந்து சமத்துவம் என்ற விதை முளைக்கின்றது.

மாடு நம்மை முட்டவந்தால் விதியின்படிதான் அனைத்தும் நடக்கும் என்று நம்பி ஓடாமல் நிற்கலாமா, அல்லது ஓடலாமா என்பதுதான் அனைவரின் கேள்வியும்.
விதியை சரியாகப் புரிந்து கொண்டவர்களுக்கு இந்த கேள்வியே எழாது, விதி உண்மை ஆனால் எது விதி என்பது நிகழ்வுக்கு முன்பே யாரும் தெரிந்து கொள்ள முடியாது. முன்கூட்டியே விதியை தெரிந்து கொள்ள முடியாது என்பதும் விதியே.

விதியை தவறாக புரிந்து கொண்டு ஓடாமல் இருந்தால் அதுவும் விதியே, விதியை சரியாக புரிந்து கொண்டு ஓடினால் அதுவும்

விதியே,விதியைப் பற்றி எதுவுமே தெரியாமல் எது செய்தாலும் அதுவும் விதியே.

விதியை சரியாக நாம் புரிந்து கொண்டால் நம்முடைய செயலை, முயற்சியை யாரும் ஒருபோதும் கைவிடப் போவதில்லை. மாறாக செயல் நிறைவுபெற்றப்பிறகு நாம் பெற்ற வெற்றிக்கும், தோல்விக்கும் விதியே காரணம் என்று நாம் என்னும்போது எளியவரை ஏளனம் செய்ய மாட்டோம், வளியவரிடம் வணங்கி நிற்க மாட்டோம், இந்த புரிதலே சமுதாயத்தில் சமத்துவத்தை உருவாக்கும்.
தவறு செய்தவர்களை குற்றவாளியாக பார்க்காமல் சமுதாயத்தால் பாதிக்கப்பட்டவராக பார்க்கும் நிலை உருவாகும். இதனால் புதிய நீதி உருவாகும். விதி ஆத்திகத்தையும், நாத்திகத்தையும் இணைக்கும் பாலம், எனவே மனிதர்களுக்கிடையே சாதி, மதம்,மொழி, கல்வி, வேலைவாய்ப்பு, அறிவு, பொருளாதாரம்,ஆகிய அனைத்திலும் சமத்துவம் உருவாக, விதியை மூடநம்பிக்கையாக பார்க்காமல் விதியை அறிவியலாக பார்க்க வேண்டும்.

விதி உண்மை என்றால், நான் படிக்காமல், உழைக்காமல், முயற்சி செய்யாமல் இருந்தால் விதியின் படி அனைத்தும் எனக்கு கிடைக்குமா என்பதுதான் அனைவரின் கேள்வி. இதற்கும் நாம் அறிவியலால் விடை தேடுவோம், நடக்க இருப்பது அனைத்தும் விதிப்படிதான் நடக்கும். ஆனால் எது விதி என்று நடந்து முடிந்த பிறகு தான் நமக்குத் தெரியும். காரணம் பல கோடி இறந்த கால நிகழ்வுகளின் கூட்டு எதிர்வினை தான் இந்த நொடியில் நடக்கும் நிகழ்வுக்கு காரணம்.

தொடர்வினை தத்துவத்தின்படி

படித்தால்தான் தேர்ச்சி பெறமுடியும் !
உழைத்தால்தான் உயர முடியும் !
முயற்சி செய்தால்தான் வெற்றி பெற முடியும் !

விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பது போல் தொடர்வினை தத்துவத்தின்படி முயற்சியின் தோடர்வினை தான் வெற்றி.
வெற்றி நம்முடைய விதியாக இருக்க வேண்டுமென்றால், வெற்றியின் முன்வினை முயற்சியாக இருக்க வேண்டும். முயற்சி இண்மையின் தொடர்வினை ஒருபோதும் வெற்றியாக இருக்காது.

வேறு ஒருவர் தேர்வு எழுதினால் விதியின்படி எல்லாம் நடக்கும் என்று நாம் சொன்னால் அது தவறு இல்லை, தேர்வு எழுதுபவர் எல்லாம் விதிப்படி நடக்கும் என்று படிக்காமல் தேர்வு எழுதினால் அது தவறு.
நம்மால் பங்களிக்க முடியாத செயலுக்கும், நம் சக்திக்கு அப்பாற்பட்ட செயலுக்கும், நடந்துமுடிந்த செயலுக்கும், எல்லாம் விதி என்று சொல்வது அறிவு.
நாம் செய்ய வேண்டிய வேலையை செய்யாமல் விதிப்படி நடக்கும் என்று பலனை மட்டும் எதிர்பார்ப்பது, தொடர் வினை தத்துவத்திற்கு முரணான அறிவில்லா செயல்.

விதியை முன்கூட்டியே தெரிந்து கொள்ள முடியாத நிலையில், விதி உண்மை என்பதை அறிந்து என்ன பயன் என்று பலரும் நினைக்கலாம், மின்சாரத்தை பெஞ்சமின் பிராங்கிளின் கண்டுபிடித்தபோது இன்றைய மின்சார பயன்பாட்டை யாரும் அன்றே நினைத்துக்கூட பார்த்திருக்க வாய்ப்பில்லை, அதுபோல் விதி உண்மை என்று கண்டுபிடித்ததை தொடர்ந்து

உலக நீதியை எப்படி மாற்றி அமைக்கலாம் என்று உலக நாடுகள் சிந்திக்க வேண்டும்.

விதி உண்மை என்பதை புரிந்துக் கொள்வதால் மட்டுமே மனிதர்களுக்கு இடையே சமத்துவத்தை ஏற்படுத்த முடியும்.

தவறு செய்தவனை குற்றவாளியாக மட்டும் பார்க்காமல் விதியால் பாதிக்கப்பட்டவனாகவும் பார்த்து அவனை அந்த சூழலில் இருந்து மீட்கவேண்டும்.

போட்டிக்கு முன் தொடர் வினையை நினைவு கொண்டால் வெற்றி பெறுவோம், வெற்றி பெற்றபிறகு விதியை நினைவு கொண்டால் ஆணவம் இல்லாமல் அமைதியாக இருப்போம்.

தொடர்வினை என்ற முயற்சி இல்லாமல் வெற்றி என்ற விதியை அடையமுடியாது.

நாம் பெரும் தகவலோடு நம்முடைய அறிவு துணை சேர்ந்து ஆராய்ந்தால் அது புரிதல். நாம் பெரும் தகவலோடு துணை சேர்ந்து ஆராய நம்மிடம் அதை சார்ந்த அறிவு (அனுபவம்) இல்லை என்றால் அது நம்பிக்கையாகவே (தகவலாகவே) நம்மிடம் இருக்கும்.

பெரும்பாலானவர்கள் நம்புவதையே புரிந்ததாக எண்ணுகின்றார்கள், தகவல் சேகரிப்பதையே அறிவாக எண்ணுகின்றார்கள், அதனால் தான் படித்தவன் அறிவாளியாக இந்த உலகில் பார்க்கப் படுகின்றான்.

2+2=4,4x4=16 என்பதை புரிந்துகொண்டால் கணிதம் வாழ்க்கைக்கு பயன்படும். புரிந்து கொள்ளாமல் ஆசிரியர் சரியாகத்தான் சொல்லி இருப்பார் என்று எண்ணி விடையை

மட்டும் நினைவில் வைத்துக் கொண்டால் கணிதம் வாழ்க்கைக்கு பயன் படாது. அதுபோல் விதியை உண்மை என்று நம்புவதும், பொய் என்று நம்புவதும் வாழ்க்கைக்கு பயன் தராது.

விதி உண்மை என்ற என்னுடைய ஆய்வின் முடிவை, விதியை உண்மை என்று நம்பும் பலர் ஏற்றுக்கொள்வார்கள். காரணம் அவர்களுடைய நம்பிக்கையும், என்னுடைய ஆய்வின் விடையும் ஒத்துப் போவதால்.ஆனால் நான் சொல்வதை புரிந்தது போல் எண்ணி நம்புகின்றார்கள் என்றுதான் பொருள்.

கணிதத்தில் step ஐ தவறாக போட்டுவிட்டு விடையை மட்டும் நினைவில் வைத்துக் கொண்டு சரியாக எழுதி விட்டால் கணிதம் தெரிந்ததாக பொருளல்ல.
விதி உண்மை என்பதை கணிதம் போல் step-by-step உலக மக்கள் என்னுடைய ஆய்வை புரிந்து கொண்டால் தான் பிரிவினை அரசியலை விட்டு சமத்துவம் என்ற அற்புத அரசியலை வரும் காலத்தில் உருவாக்க முடியும்.

கர்மாவை உண்மை என்று நம்புவது அறியாமை !
கர்மாவை அறிவியலால் புரிந்து கொண்டால் அறிவு !
முன்னோர்கள் கர்மாவை புரிந்து கொள்ள முடியாததால் தான் நம்பினார்கள், கர்மா என்ற சொல்லுக்கு அறிவியலில் தொடர்வினை என்று பொருள். எந்த ஒரு செயலுக்கும் எதிர்வினை உண்டு என்பது அறிவியல்.
கர்மா என்பது முன்ஜென்மத்தில் செய்த செயலின் பலன் அல்ல. கர்மா என்பது முன்னோர்கள் செய்த செயலின் பலன் என்று பொருள்.

முன் ஜென்மம், மறுபிறவி என்று எதுவும் இல்லை. மனிதனை வழி நடத்த உருவாக்கப்பட்ட ஒரு கற்பனைக் கதை.

நேற்றைய நிகழ்வுகள் தான் இன்றைய நிகழ்வுக்குக் காரணம் !
இன்றைய நிகழ்வுகள் தான் நாளைய நிகழ்வுக்குக் காரணம் !
நாம் ஒரு கல்லைப்போல் தான் தொடர்வினை இயக்கினால் தான் நாம் இயங்க முடியும் எனவே கர்மா என்பதும் விதி என்பதும் அறிவியல் உண்மை.
இன்று நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும் நூறு சதவிகிதம் நம் சந்ததிகளை பாதிக்கும்.

இன்றைய அறிவார்ந்த சமுதாயத்தில் கர்மா என்று சொல்லாமல் தொடர்வினை என்று அறிவியல் பெயரை சொன்னால் சரியாக இருக்கும்.

நீதிமன்றமும் குற்றவாளியை தண்டனைக்கு உரியவர் என்று மட்டும் பார்க்காமல் தொடர் வினையால் (கர்மா) பாதிக்கப்பட்டவர் என்று அறிவியல்பூர்வமாக அணுகினால் புதிய நீதி உருவாகும்.

# கடவுள்

இயற்கை எனும் கடவுள் எனக்கு கொடுத்த மூன்றாவது வரம் கடவுளைப் பற்றிய அறிவு.

நான் கடவுள் நம்பிக்கை உள்ள குடும்பத்தில் பிறந்ததால் வள்ளலாரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு என்னுடைய 25 வயதிலிருந்து முழுமையாக சைவத்திற்கே மாறிவிட்டேன், அந்த அளவிற்கு கடவுள் நம்பிக்கை உடையவனாக இருந்தேன். பத்து வயதில் இருந்து எனக்கு அறிவியல் மீது ஆர்வம் அதிகம், அதனால் இறைவனிடம் தினமும் வேண்டும்பொழுது அறிவியலில் நான் புதியதாக ஏதாவது ஒன்றை கண்டுபிடிக்க வேண்டும் என்று கடவுளிடம் வேண்டிக் கொள்வேன், காலங்கள் கடந்தன என்னுடைய 45 ஆவது வயதில் நான் அறிவியலைப் பற்றி சிந்தித்து கொண்டு இருக்கும் பொழுது இறந்த காலத்தின் தொடர்வினை தொடர்பு இல்லாமல் என்னால் புதியதாக எதையும் சிந்திக்கவே முடியவில்லை என்பதை உணர்ந்தேன். இதை நான் உணர்ந்ததும் என்னையே மறந்தேன். கடவுள் என்னுடைய 35 ஆண்டுகால வேண்டுதலை ஏற்று எனக்கு வரம் கொடுத்ததாகவே நான் உணர்ந்தேன். இறைவனை வணங்கி என்னுடைய நன்றியை தெரிவித்துவிட்டு நான் புதிதாக பெற்ற” நம் சிந்தனை நம் கட்டுப்பாட்டில் இல்லை “என்ற அறிவை அறிவியலால் ஆய்வு செய்ய தொடங்கினேன்.

ஆன்மீகத்தில் அறிவை ஒதுக்கி வைத்து விட வேண்டும் அப்போதுதான் தன்னை மறந்த நிலைக்கு செல்ல முடியும்.

அறிவியலில்... ஆன்மீகம், உணர்வு இரண்டையும் ஒதுக்கி வைத்து விட வேண்டும் அப்போதுதான் அறிவுபூர்வமாக சிந்திக்க முடியும்.
ஆன்மீகத்துக்கான வழி உணர்வு!
அறிவியலுக்கான வழி அறிவு!

நம்முடைய சிந்தனை நம் கட்டுப்பாட்டில் இல்லை என்ற அறிவை நூலாக பிடித்துக் கொண்டு உலக நிகழ்வுகளை ஆய்வு செய்ய தொடங்கினேன், அதன் தொடர்ச்சியாக விதி உண்மை என்ற அறிவு எனக்கு கிடைத்தது.

விதி உண்மை என்பதால் அனைத்து உலக நிகழ்வுகளுக்கும் விதியே காரணமாகி விடுவதால்,தொடர்வினை தத்துவத்தை மீறி கடவுளின் செயல் என்று இந்த உலகில் எதுவும் நடக்கவில்லை, நடக்கவும் சாத்தியமில்லை. அதனால் கடவுள் இல்லை என்பது என்னுடைய ஆய்வு மூலம் அறிவியல் பூர்வமாக உறுதியானது.

நம் சிந்தனை நம் கட்டுப்பாட்டில் இல்லை என்ற அறிவையும்,விதியைப் பற்றிய அறிவையும் கடவுள்தான் எனக்கு கொடுத்தார் என்று எண்ணிக் கொண்டு இருக்கும் நேரத்தில் கடவுள் இல்லை என்ற அறிவை நான் பெற்ற பொழுது ஒரு கணம் உறைந்து விட்டேன்.
என்னுடைய ஆய்வின் உண்மையை என் உணர்வால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை, சிறிது நேரம் என்னுடைய உணர்வும், அறிவும் செயல்பட முடியாமல் அமைதியாக இருந்தன. அந்த ஒரு கணம் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தை இந்த உலகில் எந்த ஒரு ஆன்மீகவாதியும், அறிவியலாளர்களும் அனுபவித்திருக்கவே மாட்டார்கள்.

“நெற்றிக்கண்ணை திறந்தாலும் குற்றம் குற்றமே “என்று சிவனைப் பார்த்து புலவர் நக்கீரன் சொன்னது போல் என்னுடைய அறிவு என்னுடைய உணர்வை பார்த்து நீ ஏற்றுக் கொண்டாலும் ஏற்காவிட்டாலும் கடவுள் இல்லை என்பதுதான் உண்மை என்று உறுதியாக சொல்லிவிட்டது. அதற்கு என்னுடைய உணர்வு, என்னுடைய அறிவிடம் கேட்டது, 35 வருட தவத்தால் எனக்கு கடவுளால் கொடுக்கப்பட்ட அறிவு நீ,நீயே கடவுள் இல்லை என்று சொல்லலாமா என்று, அதற்கு என்னுடைய அறிவு சொன்னது 35 ஆண்டு தவத்தால் நான் உனக்கு கிடைக்கப்பெற்றது உண்மைதான் ஆனால் அது கடவுளால் கொடுக்கப்படவில்லை, தொடர்வினை எனும் விதியால் கொடுக்கப்பட்டது.
நீ என்னவாக ஆக வேண்டும் என்று நினைக்கிறாயோ அதுவாகவே ஆவாய் என்பதும் விதி, நீ எதை நினைக்க வேண்டும் என்பதை இறந்த காலத்தின் தொடர்வினை தான் தீர்மானிக்கும் என்பதும் விதி என்றது.

என்னுடைய ஆய்வின் மூலம் நான் தெரிந்து கொண்டது, இந்த பிரபஞ்சம் தொடர்வினை தத்துவத்தில் தான் இயங்குகின்றது, இதில் மனிதனின் பிறப்பு, இறப்பு சிந்தனை, செயல் அனைத்தும் உட்பட்டது.
மனிதன் கல்லை போல் தான் வெளிசக்தி இயக்கினால் தான் இயங்க முடியும். விவேகானந்தர் மற்றும் முன்னோர்கள் சொன்னது போல் நமக்குள் தான் அனைத்து சக்தியும் இருக்கின்றது நம்மால் எதையும் செய்ய முடியும் என்று சொன்னது முழுக்க முழுக்க தவறானது.
இந்த பிரபஞ்சத்தில் ஒவ்வொரு அணுவின் அசைவிற்கும் தொடர்வினை உண்டு.

ஒவ்வொரு அணுவின் அசைவும் தொடர்வினை எனும் இயற்கையின் சக்தியால் கண்காணிக்கப்படுகின்றது எதிர்வினைக்காக.

நம்முடைய ஒவ்வொரு அசைவையும், செயலையும், சிந்தனையையும் தொடர்ந்து காணொளி(வீடியோ) எடுப்பது போல் தொடர்வினை எனும் தத்துவக் கடவுள் நம்மை பார்த்துக் கொண்டேதான் இருக்கின்றது, எதிர் வினைக்காக.
இதிலிருந்து யாரும் தப்ப முடியாது. ஆன்மீகத்தில் பாவ மன்னிப்பு என்ற கதைகள் உண்டு, இயற்கையிடம் அதற்கு வாய்ப்பே இல்லை.
நாம் எதை செய்கின்றோமோ அதற்கான பலனை அனுபவித்தே ஆக வேண்டும்.

இந்த உலகில் யாரும் கடவுளின் தூதரும் அல்ல முகவருமல்ல !

நம்முடைய நேர்மையான செயலால் மட்டுமே தொடர்வினையின்படி நாம் நன்மையை பெற முடியுமே தவிர ஆன்மீகவாதிகளின் போலியான செயலால் ஒருபோதும் நன்மைகள் கிடைக்காது !

என்னுடைய ஆய்வின்படி உறுதியாக நான் புரிந்து கொண்டது கடவுள் என்ற தொடர்வினை தத்துவம் நம் செயலை பார்த்துக்கொண்டே இருக்கின்றது எதிர்வினைக்காக என்பதே, இதை அறிவியல் அறிவு உள்ளவர்கள் புரிந்து நேர்மையாகவும், ஒழுக்கமாகவும் செயல்பட்டால் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நல்லது. புரிந்து கொள்ள முடியாதவர்கள் நான் சொல்வதை நம்புங்கள் இது சத்தியம் ! யாரும் பார்க்கவில்லை என்று ஒருபோதும் எந்த தவறும் செய்யாதீர்கள்

நிழலைப்போல் தொடர்வினை என்ற தத்துவ கடவுள் உங்களை பார்த்துக் கொண்டே தான் இருக்கின்றார்.

கடவுளை பற்றிய ஆய்வுக்குப் பிறகு எனக்குள் ஏற்பட்ட மாற்றங்கள், கடவுள் நம்பிக்கை இருந்தபோது கடவுள் நாம் செய்கின்ற தவறை மன்னிப்பார் என்ற நம்பிக்கையில் இருந்தேன். ஆய்விற்குப் பிறகு கடவுள் இல்லை ஆனால் தொடர்வினை எனும் இயற்கையின் சக்தி ஒவ்வொரு அணுவின் அசைவையும் பார்த்துக்கொண்டு இருக்கின்றது எதிர்வினைக்காக என்று அறிவால் நான் புரிந்து கொண்டபிறகு ஒருவித பயத்தோடு மிகவும் நேரமையாகவும், ஒழுக்கமாகவும் இப்பொழுது இருக்கின்றேன்.

கடவுள் இல்லை என்பதை நான் உணர்ந்த உடன் அனைத்து கோயில்களும், தேவாலயங்களும், மசூதிகளும் எனக்கு சமமாக தான் தெரிகின்றன, காட்சி பொருளாக.

கடவுள் நம்பிக்கையை விட, தொடர்வினை தத்துவமான இயற்கையை பற்றிய புரிதலே உலக மக்கள் அனைவரிடத்திலும் நல்லிணக்கத்தையும், நேர்மையையும், ஒழுக்கத்தையும் உருவாக்கும் என்று உறுதியாக நம்புகின்றேன்.

கடவுள் இல்லை என்பதை இன்று பகுத்தறிவாளர்களே பலரும் நம்பவில்லை.
கடவுள் இல்லை என்ற நம்பிக்கை பகுத்தறிவு!
கடவுள் இல்லை என்ற புரிதல் மட்டுமே ஆறாவது அறிவின் வெளிப்பாடு !
என்னுடைய பார்வையில் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களிடமும் ஆன்மீகம் பற்றிய புரிதல் இல்லை.

கடவுள் இல்லை என்று சொல்லும் பகுத்தறிவாளர்களிடம் பகுத்தறிவு பற்றிய புரிதல் இல்லை.
ஏன் கடவுள் இல்லை ?என்பதை என்னுடைய ஆய்வை படித்து புரிந்து கொண்டு அதன் பிறகு கடவுள் இல்லை என்று சொன்னால் தான் அது பகுத்தறிவுக்கு அழகு.
கடவுள் இல்லை என்ற ஒற்றை வார்த்தை பகுத்தறிவாகாது.

கடவுள் இருக்கு என்பதற்கும், இல்லை என்பதற்கு இதுவரை யாரும் சரியான ஆதாரத்தை கொடுக்கவில்லை.கடவுள் இருந்தால் காட்டு என்பதும், கடவுளை பார்க்க முடியாது உணரத்தான் முடியும் என்பதும் முடிவிலா போராட்டமாக தான் உள்ளது.

பலஆயிரம் ஆண்டுகளாக பல கோடி மக்கள் கடவுள் இருக்கு என்று நம்புவதற்கு காரணம் அவர்கள் வேண்டிக் கொண்டதில் சில நடந்ததாலும், கடவுளை வணங்குவதால் அவர்களுடைய துன்பம் குறைந்ததை போல் உணர்வதுமே காரணம்.
கடவுள் நம்பிக்கை துன்பத்துக்கு மருந்தாக இருக்கின்றது.
கடவுளை நம்புவதால் வாழ்க்கையில் நம்பிக்கை ஏற்படுகின்றது.
யாமிருக்க பயம் ஏன் !
கடவுள் நிச்சயம் உன்னை காப்பார் !
இந்த நிலையும் மாறும் ! இதுபோன்ற நம்பிக்கையே ஒருவனை துன்பத்திலிருந்து மீண்டுவாழ நம்பிக்கை கொடுக்கின்றது, இதை யாராலும் மறுக்க முடியாது. அதனால் தான் அறிவு, ” கடவுள் இல்லை “என்று சொன்னாலும் உணர்வு கடவுளையே நம்புகின்றது.

மருந்து இல்லாமல் நோயாளியின் நோயை கடவுளை வணங்குவதால் குணப்படுத்த முடியுமா? முடியாது என்பதால்

கடவுள் இல்லை என்பது நாத்திகனின் நம்பிக்கையாக உள்ளது. இரண்டும் அவரவர் பார்வையில் சரியே ஆனால் என்னுடைய ஆய்வின்படி இரண்டுமே தவறு தான்.

எந்த ஒரு மனிதனுடைய சிந்தனையும் அவனுக்கு கட்டுப்பட்டு இல்லை, இறந்த காலத்தில் தொடர்போடு தான் அவனுடைய சிந்தனை இருக்கிறது சுயமாக யாரும் சிந்திக்க முடியாது. இறந்த காலத்தின் தொடர்பு இல்லாமல் யாராவது சிந்தித்ததாக நிரூபித்தால் ஒரு கோடி ரூபாய் பரிசு.

ஒருவனுடைய செயல் அவனுடைய சிந்தனைக்கு கட்டுப்பட்டு இல்லை எனவே அவனுடைய செயலுக்கு அவன் காரணம் அல்ல, இறந்த காலமே காரணம். இன்றைய நிகழ்வுகள் அனைத்தையும் நேற்றைய நிகழ்வுகளே திர்மானிக்கின்றன. நாளைய நிகழ்வை இன்றைய நிகழ்வுகளே தீர்மானிக்கின்றன, இதுதான் விதி இந்த விதியை மீறி கடவுளின் செயலால் இந்த உலகில் எந்த நிகழ்வுகளும் நடந்ததாக ஆதாரம் இல்லை. எனவே கடவுள் இல்லை என்பதும், விதி உண்மை என்பதும் உறுதி. எது நடக்குமோ அது நடந்தேத்தீரும். ஒவ்வொரு அணுவின் செயலும் தீர்மானிக்கப்பட்ட ஒன்றே விதியை யாரும் நம்பவேண்டாம் புரிந்துகொள்ளவேண்டும், இது அறிவியல்.

கடவுள் இல்லை என்பது உறுதியான உண்மை என்றால் பல நூறு கோடி மக்களின் கடவுள் நம்பிக்கை பொய்யா என்றால், அவர்களுடைய நம்பிக்கை உண்மையே !
ஆனால் அது கடவுளின் செயல் அல்ல! சிறுவயதில் நம் காலில் முள் குத்தினால் முல்லை எடுக்கும்போது பச்சை மரத்தை பார்த்து கொண்டிருவலிக்காது என்று கூறிக்கொண்டு முல்லை எடுத்துவிடுவார்கள் நம் கவனம் பச்சைமரத்தின் இலைமீது இருந்ததால் வலி நமக்குத் தெரியாது, இதுபோல் நாம்

துன்பத்தில் இருக்கும் போது இறைவன் பார்த்துகொள்வான் என்று நம்பும் போது துன்பம் மனதில் குறைகின்றது இது கடவுளின் செயல் அல்ல,சிந்தனையை திசை திருப்பும் செயல். இந்த நடவடிக்கைகள் மூலம் துன்பம் குறைகின்றது இதைபோல் கடவுளை வேண்டிக்கொண்டால் நினைத்தது நடக்கும் என்ற நம்பிக்கையும் உண்மையே நீ என்னவாக ஆக விரும்புகின்றாயோ அதுவாகவே ஆவாய். நம் சிந்தனையும் செயலும் ஒன்றின் மீது இருக்கும் போது அது சிறப்பாக நடக்கும் இது கடவுளின் செயலல்ல நம்முடைய சிந்தனை தான் அதற்கான காரணம்.

எனவே கடவுள் இல்லை என்று எண்ணி தவறுகளை செய்து துன்பத்தில் வாழாமலும்,

கடவுள் இருக்கு என்று எண்ணி என் கடவுளுக்கு தான் சக்தி அதிகம்,என் மதம் தான் சிறந்தது என்று எண்ணி மூடச் செயல்கள் செய்யாமலும் இன்று நாம் செய்கின்ற செயல்கள் தான் நாளைய நம் சமுதாயத்தை பாதுகாக்கும் என்பதை உணர்த்து. இயற்கையை வணங்குவோம்!

இயற்கை நிச்சயம் நம்மை காக்கும்!

நம்பிக்கை தான் வாழ்க்கை !

நம்புவோம் இயற்கையையும், விதியையும் கடவுளாக!

விதி உண்மை என்று சொன்னதால் நாத்திகரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

கடவுள் இல்லை என்று சொன்னதால் ஆத்திகரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். காரணம் தன் பிழைப்பு கெட்டுவிடும் என்பதால், எனவே நடுநிலையில் உள்ளவர்கள் இதை புரிந்து மதநல்லிணக்கத்துடன் வாழ்வது இனியது.

“யாமிருக்க பயமேன் “ இது வெறும் வார்த்தையல்ல மந்திரம், துன்பத்தில் இருந்து இறைவன் நம்மை காப்பார் என்று ஒருவர் நம்பினால் அதை யாரும் பாழ்பண்ணக்கூடாது.

என்னை கடவுள் காப்பார் என்று நான் நம்பினால் அது என்னுடைய நம்பிக்கை அதில் தலையிட யாருக்கும் உரிமை இல்லை! இதற்குப் பெயர்தான் கடவுள் நம்பிக்கை.
ஆனால் நான் வணங்கும் ராமர்தான் கடலுக்கு அடியில் பாலம் அமைத்தார் என்ற கட்டுக்கதையால் சேது கால்வாய் திட்டத்தை நிறுத்தி அரசுக்கு பல ஆயிரம் கோடிரூபாயை நஷ்டப்படுத்துவது நீதி அல்ல. இது போன்ற கடவுள் நம்பிக்கை நம்நாட்டின் வளர்ச்சிக்கே எதிரானது.

நான் வணங்கும் கடவுள் தான் உயர்ந்தது, சிறந்தது என்று மதத்தால் உலக மக்களைப் பிரிப்பது மனித குலத்திற்கே எதிரானது.

கடவுள் நம்பிக்கை தனிமனித சிந்தனை, அது தனிமனித நம்பிக்கையாகவே இருக்கும் வரை அதில் யாரும் தலையிட கூடாது. ஆனால் தனிமனித நம்பிக்கை ஒரு சமுதாயத்தின் நம்பிக்கையாக மாறும்போது அந்த கடவுள் நம்பிக்கை விவாதப்பொருளாக மாறுவதில் தவறு இல்லை.

கடவுள் நம்பிக்கை தனிமனித உரிமை என்றாலும் கடவுள் நம்பிக்கை சமுதாயத்தில் மனிதர்களுக்குள் ஏற்றத் தாழ்வை ஏற்படுத்துவதால் கடவுள் நம்பிக்கை விவாதத்திற்கும் உட்பட்டதே!

தன்னம்பிக்கையை போல் கடவுள் நம்பிக்கையும் தனிமனித நம்பிக்கையாக இருந்தால் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை.

கடவுள் நம்பிக்கை ஒரு சமுதாயத்தின் நீதியாக மாறும் போதுதான் அந்த நம்பிக்கையை தவறு என்று சொல்ல வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

கடவுள் நம்பிக்கையில் ஒரு மனிதன் தன் மீது எவ்வளவு ஊசியை வேண்டுமானாலும் குத்திக் கொள்ளலாம் அதில் எந்த தவறும் இல்லை, அதனால் மற்றவர்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை. ஆனால் அதே கடவுளின் பெயரால் சமுதாயத்தில் பிரிவினையை ஏற்படுத்தி உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேற்றுமையை ஏற்படுத்தி அறியாமையில் உள்ள மக்களை ஏமாற்றுவது தான் தவறு.இந்த தவறை தடுக்கவே கடவுள் நம்பிக்கையை உடைக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

கடவுளைப்பற்றிய புரிதல் ஆத்திகர்களுக்கும், நாத்திகர்களுக்கும் இல்லாத நிலையில் இருவரும் பேசிக் கொள்வதைப் பார்த்தால் எனக்கு மிகவும் நகைச்சுவையாக தெரிகின்றது.

கடவுள் நம்பிக்கை என்பது கைத்தடியை போன்றது, அதை பிடுங்குவது பாவம். கைத்தடியை பயன்படுத்துபவர்கள் தானாகவே தூக்கிப் போடும் அளவுக்கு ஆரோக்கியத்தை (அறிவை) அவர்களுக்கு கொடுத்தால் அவர்கள் ஏன் கைத்தடியை பயன்படுத்த போகிறார்கள்.
நாத்திகர்கள் கடவுள் இல்லை என்பதற்கான ஆதாரத்தை கொடுக்காமல் கடவுள் இல்லை என்று சொல்வது, முடியாதவனிடம் ஆரோக்கியத்தை கொடுக்காமல் அவன் கைத்தடியை பிடுங்குவதற்கு சமம்.

“இல்லாத கடவுள் இருட்டினில் வழித்துணையாய் வந்ததுபோல் “ என்று நான் எழுதிய ஒரு வரிக்குள் ஆத்திகமும், நாத்திகமும்

முரண்பாடான இரண்டு கருத்துக்கள் ஒன்றுசேர்ந்து வருவது தான் இந்த வரியின் சிறப்பு.

அறிவியல் படி கடவுள் இல்லை என்றாலும் எந்தத்துணையும் இல்லாமல் இருட்டில் தனியாக பயணிக்கும் ஒருவனுக்கு அவன் வணங்கும் தெய்வமே (கடவுள் நமக்கு துணையாக வருகின்றார் என்ற நம்பிக்கையே) அவனுக்கு துணையாக செல்கின்றது. கடவுள் இல்லை என்றாலும், கடவுளை நம்பினால் நன்மையே என்ற உண்மையை மறுக்க எந்த நாத்திகனாலும் முடியாது. அதுபோல் விதி உண்மை என்பதால் கடவுள் இல்லை என்பதை எந்த ஆத்திகனாலும் மறுக்க முடியாது.

கடவுள் நம்பிக்கை உளவியல் சார்ந்தது, இதற்கு மாற்று விதி. இதை பகுத்தறிவாளர்களும், முற்போக்குவாதிகளும், நாத்திகர்களும், புரிந்து கொள்ளாமல் கடவுள் இல்லை என்று சொல்வதால் எந்த பயனும் இல்லை. அவர்களுடைய குடும்பமே அவர்களுடைய கருத்தை ஏற்றதாக தெரியவில்லை.

நாத்திகர்கள் எப்போது விதி உண்மை என்பதை புரிந்து கொள்கின்றார்களோ அப்போதுதான் ஆத்திகர்களும் கடவுள் இல்லை என்பதை புரிந்து கொள்வார்கள்.

# அறிவு

இயற்கை எனும் கடவுள் எனக்கு கொடுத்த நான்காவது வரம் அறிவைப் பற்றிய அறிவு.

பலருக்கு புத்தகத்தை படித்தால் அறிவு வளரும் ஆனால் எனக்கு புத்தகம் எழுதியதால் அறிவைப் பற்றிய அறிவு கிடைத்தது.
தன்னை அறிவால் உயர்ந்த்வன் என்று என்னுகின்ற யாருக்கும் அறிவு என்றால் என்ன என்று தெறியாது.
அறிவால் நான் மற்றவர்களைவிட உயர்ந்தவன் அல்ல என்பதை நான் உணர்ந்ததால்தான், அறிவு என்றால் என்ன என்பதை நான் அறிய முடிந்தது.

நான் எழுதிய புத்தகத்தை படித்தவர்களில் 10% பேருக்கு மட்டும் தான் நான் எழுதிய புத்தகத்தின் தகவல் அறிவாக மாறியது, மற்றவர்களுக்கு என்னுடைய கருத்தை உள் வாங்கிக் கொள்ள முடியவில்லை. நான் எழுதியது சிலருக்கு புரிகின்றது பலருக்கு புரியவில்லை அதற்கு என்ன காரணம் என்று ஆய்வு செய்தேன், அந்த ஆய்வின் மூலம் நான் பெற்ற அறிவை இங்கு பதிவிடுகின்றேன்.

பல்லாயிரம் ஆண்டுகளாக மனிதன் எண்ணினான் பூமியை தான் சூரியன் சுற்றி வருகிறது என்று. ஆனால் இப்போது அது உண்மை அல்ல சூரியனைத்தான் பூமி சுற்றிவருகின்றது என்று உணர்ந்து விட்டான். அது போல்தான் நாம் இதுவரை படித்தவன்தான் அறிவாளி, புத்தகம் தான் அறிவைக் கொடுக்கும் என்று எண்ணி இருந்தோம். அது பொய்.

வாழ்க்கைதான் அறிவைக் கொடுக்கும். அனுபவம் தான் அறிவைக்கொடுக்கும் என்பது என்னுடைய ஆய்வின் முடிவு.

புத்தகம் தகவலை மட்டும்தான் கொடுக்கும். அறிவைக் கொடுக்காது. வாழ்க்கை அனுபவம் தான் அறிவை கொடுக்கும்.

அதனால் படித்தவர்கள் எல்லோரும் அறிவாளிகள் அல்ல. படிக்காதவர்கள் எல்லோரும் முட்டாள்களும் அல்ல. ஒருவன் வாழ்ந்த வாழ்க்கை தான் அவனை முட்டாளாகவும், அறிவாளியாகவும், மாற்றுகின்றது.

ஒரு மனிதன் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து புலன்களின் அனுபவத்தால் மட்டும் தான் அறிவை பெறமுடியும்.

மெய்: வலி தெரியாத, தொடுதலை உணர முடியாத ஒருவர் உணர்வுகளை பற்றிய அறிவை பெற முடியாது!

வாய்: சுவையை உணர முடியாதவன் சுவையைப்பற்றிய அறிவை பெற முடியாது!

கண்: கண் இல்லாதவன் வண்ணங்களைப் பற்றிய அறிவை பெற முடியாது!

மூக்கு: வாசனையை நுகர முடியாதவன், வாசனையைப் பற்றிய அறிவை பெற முடியாது!

செவி: செவி கேளாதவன் இசையை பற்றிய அறிவை பெற முடியாது!

நம்முடைய ஐந்து புலன்களும் அதற்கான வேலையை செய்தால் மட்டும் தான் நாம் அறிவை பெற முடியும். காது செய்யக்கூடிய

வேலையை கண்ணால் பார்த்து படிப்பதாலோ, மூக்கு செய்யக்கூடிய வேலையை காதால் கேட்பதாலோ அறிவை பெற முடியாது.

இது நாள் வரை நம்முடைய ஐந்து புலன்களால் பெற்ற அனுபவ அறிவுடன் நாம் படிக்கின்ற செய்தி சேர்ந்தால்தான் அது நம்முடைய அறிவாக மாறும். அனுபவ அறிவு இல்லாமல் படித்து பயன் இல்லை.

பாலைத் தயிராக்குவதற்கு கொஞ்சம் தயிரை பாலில் சேர்ப்பதைப் போல், நாம் படிக்கின்ற செய்தி நம்முடைய அறிவாக மாறுவதற்கு நம்மிடம் படிக்கின்ற செய்திக்கு தொடர்புடைய அனுபவ அறிவு வேண்டும்.

சிறுவயதில் நமக்கு ஏற்பட்ட சிறு தீப்புண்ணின் அனுபவம்தான் இன்று சூரியனின் வெப்பம் எவ்வளவு இருக்கும் என்ற அறிவியலைப் படிக்கும்போது உணர வைக்கின்றது.

ஒரு மீட்டர் எவ்வளவு உயரம் என்பதை நீங்கள் பார்த்து இருந்தால்தான் எவரஸ்டு சிகரம் 8848 மீட்டர் உயரம் என்பதை படித்ததும் புரிந்து கொள்ள முடியும்.

அனுபவம் இல்லாத படிப்பு பயன் அற்றது. எனவே ஒருவனுடைய அறிவு என்பது அவன் படித்ததைப் பொருத்து அல்ல. அவனுடைய அனுபவத்தைப் பொருத்ததே. அனுபவம் தான் அறிவுக்கு ஆதாரம்.

புத்தகம் கதையை சொல்லும், கவிதையைசொல்லும், தகவலைச் சொல்லும், மற்றும் எழுத்தாளரின் மொழி ஆளுமையும் சொல்லும், ஆனால் அது அனுபவமில்லாத வாசகனுக்கு ஒருபோதும் அறிவை கொடுக்காது.

என்னுடைய இந்த தகவலை புரிந்து கொள்ளகூட இது தொடர்புடைய அறிவு வேண்டும். அறிவே இல்லாமல் அறிவைப் புரிந்து கொள்ள முடியாது.

ஒருவருடைய அனுபவம் மற்றொருவருடைய அனுபவமாக மாறாது. ஒருவர் அனுபவித்ததை எழுத்தின் மூலம் வேறு ஒருவருக்கு அனுபவிக்க கொடுக்க முடியாது. ஆயுள் முழுவதும் படித்தாலும் பசியின் கொடுமையைப் பற்றி அறிய முடியாது, ஆனால் ஒரு நாள் சாப்பிடாமல் இருந்துப் பாருங்கள். பசி என்றால் என்ன என்று புரியும்.

பசியின் கொடுமையை வள்ளலார் அவர்கள் அறிந்ததால்தான், பசியில் வாடும் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கினார்.

பசியை அறியாமல் வள்ளலார் வாழ்ந்து இருந்தால், வள்ளலார் யார் என்றே உலக மக்களுக்கு தெரியாமல் போயிருக்கும்.

மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்பவர்களில் பலர், படித்து அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றாலும் அதில் ஒரு சிலரே சிறந்த மருத்துவராகவும், பொறியாளராகவும் உருவாகின்றார்கள். அதற்குக் காரணம் கல்விக்கு அடிப்படை அறிவு அனுபவம் தான் என்ற புரிதலோடு நம் நாட்டில் செயல் முறையில் கல்வி அவர்களுக்கு பயிற்றுவிப்பது இல்லை.

மிதி வண்டியை எப்படி ஓட்டவேண்டும் என்று நான்கு ஆண்டுகள் படித்துவிட்டு ஒட்ட முடியுமா? சிந்தியுங்கள், எத்தனை வருடங்கள் படித்தாலும் அனுபவம் இல்லாமல் மிதிவண்டியை ஓட்ட முடியாது. மிதிவண்டியை ஓட்டிய அனுபவத்தை பெற்ற பிறகு அதை சார்ந்த தகவலை அதாவது எவ்வளவு வேகம் போக வேண்டும், வளைவில் எப்படி போக

வேண்டும், இடதுபக்கம் செல்ல வேண்டுமா, வலது பக்கம் செல்ல வேண்டுமா, சைகை எப்படி காண்பிக்க வேண்டும், மிதிவண்டியை எப்படி பராமரிக்க வேண்டும் என்று நாம் புத்தகத்தில் இருந்து கற்றால் அது நமக்குப் பயன்படும்.

மிதிவண்டியை ஓட்ட தெரியாதவனுக்கு மிதி வண்டி எப்படி ஒட்ட வேண்டும் என்பதை படிப்பது எப்படி பயன் அற்றதோ அதுபோல்தான் நம் நாட்டில் மருத்துவமும், பொறியியலும் படிக்கும் மாணவர்களுக்கு போதிய அளவு செயல்முறை அனுபவம் இல்லாததால் ஒரு சில மாணவர்களே குடும்ப சூழலின் காரணமாக தனிப்பட்ட முறையில் அனுபவ அறிவை பெற்று அறிவாளியாக வெளியே வருகின்றார்கள், மற்றவர்கள் மதிப்பெண்களை மட்டும் பெற்று படிப்பாளியாக வெளியே வருகின்றார்கள்.

அனுபவம் இல்லாத மருத்துவரிடம் யாரும் வைத்தியம் பார்த்துக்கொள்ள மாட்டார்கள். அனுபவம் உள்ள மருத்துவரிடம் தான் மக்கள் செல்வார்கள். இதற்குக் காரணம் நோயை குணப்படுத்தக்கூடிய அறிவை அனுபவத்தால் பெற்று இருக்கின்றார் என்பதுதான். அவர் பெற்ற அனுபவத்துடன் அவர் மேலும் மருத்துவம் தொடர்புடைய புத்தகத்தை படித்தால் அறிவு மேலும் வளரும். அனுபவமே இல்லாத நாம் புத்தகத்தை படித்து அனைத்து தகவல்களையும் நினைவில் வைத்து கொண்டால் அது அறிவு அல்ல.
அனுபவம் இல்லாத புத்தக தகவல் நமக்கு பயன்படாது.

எப்போது அனுபவ அறிவை மாணவர்களுக்கு கற்று கொடுக்கிறோமோ அப்போது தான் உண்மையான அறிவாளியை சமுதாயம் உருவாகும்.

எழுத்துத்துறையும், கல்வித்துறையும், அடுத்த நிலைக்கு செல்ல வேண்டும் என்றால்,அறிவைப் பற்றிய என்னுடைய ஆய்வை புறம் தள்ளிவிட்டு செல்ல முடியாது.

பல ஆண்டுகளாக நம் தமிழ்நாட்டில் பட்டிமன்றம் நடக்கின்றது. அதில் மிகவும் பிரபலமான தலைப்பு அறிவில் சிறந்த அறிவு அனுபவ அறிவா அல்லது படிப்பறிவா என்பதுதான். இந்த கட்டுரையை படித்தால் இனி இந்த தலைப்பில் பட்டிமன்றம் நடத்தமாட்டார்கள். காரணம் அறிவு என்றால் ஒரே அறிவுதான். அது நமக்கு அனுபவத்தால் மட்டும் தான் கிடைக்கின்றது. இதுநாள் வரை அறிவைப் பற்றிய அறிவு நம் சமுதாயத்துக்கு இல்லாததால் தான் இது போன்ற பட்டிமன்றங்களை பார்த்து ரசித்து கொண்டு இருந்து விட்டோம்.

அறிவு என்றால் புலன்களால் அறிதல் அல்லது உணர்தல். இது தான் நமக்கு அறிவை கொடுக்கின்றது.

அனுபவம் இல்லாத ஒரு பொருளைப் பற்றி படிப்பதாலோ அல்லது ஒருவர் நமக்கு சொல்வதாலோ நாம் அறிவைப் பெற முடியாது.

இதைத் தொட்டால் Shock அடிக்கும் என்று மின் சாதன பொருள் மீது எழுதி இருந்தது அதை இதுவரை மின்சாரத்தில் அடிபடாதவன் படித்து பார்த்துக்கொண்டு இருந்தான். இதை பார்த்து அருகில் இருந்தவர் சொன்னார். அதைத் தொட்டால் Shock அடிக்கும் என்றார். அது அவனுக்கு புரியவில்லை. கையை வைத்துப் பார்த்தான் மின்சாரம் தாக்கியது. இப்போதுதான் அவனுக்குப் புரிந்தது மின்சாரத்தின் Shock எப்படி இருக்கும் என்று. அருகில் இருந்தவர் கேட்டார் உனக்கு அறிவே இல்லையா என்று, உண்மையில் அவனுக்கு

அறிவு இல்லைதான். மின்சார Shock என்றால் என்ன என்பதை இதுவரை அவன் உணர்ந்தது இல்லை. அதனால் அவன் படித்ததும், கேட்டதும் அவனுக்குப் பயன்படவில்லை.

மின்சாரத்தில் அடிபடாத ஒருவருக்கு, மின்சாரம் தாக்கினால் எப்படி இருக்கும் என்பதை எப்படி புரிய வைக்கலாம் என்றால், வலிக்கும், அல்லது விருக்குன்னு இருக்கும் என்று. ஏதேனும் ஒரு உணர்வு அனுபவத்தை ஒப்பிட்டு காட்டி அதுபோல் தான் இது இருக்கும் என புரிய வைக்கலாமே தவிர, அவன் உணராத, அல்லது அனுபவம் இல்லாத ஒன்றை கூறி அதுபோல்தான் இது இருக்கும் என்றால் அவனால் எப்படி அதை புரிந்து கொள்ள முடியும். எனவே நீங்கள் எதை பற்றி படித்தாலும், அல்லது கேட்டாலும், அது உங்களுடைய அறிவாக மாற வேண்டும் என்றால் அது தொடர்புடைய அனுபவம் உங்களிடம் இருக்க வேண்டும். அப்போதுதான் நீங்கள் படித்தது அறிவாக மாறும். எனவே புத்தகத்தை படிப்பவர்கள் பலர் தான் படித்ததை தன்னுடைய அறிவாக மாற்றிக்கொள்வது இல்லை. அதனால் படித்தவர்கள் அனைவரும் அறிவாளிகள் அல்ல. ஆனால் அனுபவம் உள்ளவர்கள் அனைவரும் அறிவாளிகள் தான். என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

படித்தவர்கள் அறிவைப் பெறவேண்டும் என்றால் அனுபவத்தைப் பெறவேண்டும்.
அனுபவம் உள்ளவர்கள் அறிவை மேலும் வளர்க்க வேண்டும் என்றால் படிப்பதன் மூலமும், கேட்பதன் மூலமும் அதிக தகவலை பெற வேண்டும்.அறிவாளி படிப்பதால், கேட்பதால்அறிவை பெற முடியும், அறிவு இல்லாதவன் படிப்பதால்,கேட்பதால் அறிவைப் பெற முடியாது.

அனுபவம்தான் அறிவு! படிப்பறிவு என்ற ஒன்று இல்லவே இல்லை. படிப்பு என்பது தகவல் மட்டுமே.தகவல் அறிவாக மாற வேண்டும் என்றால் நம்மிடம் அனுபவம் என்ற அறிவு இருக்க வேண்டும்.

கணிதத்தை கற்றுக் கொள்வதற்கும் அனுபவம் வேண்டும். அனுபவம் இல்லாமல் கணிதம் புரியாது. முதல் வகுப்பில் படிக்கும் போது ஒரு பழத்தை காண்பித்து ஒன்று என்றும், பத்து பழத்தை காண்பித்து பத்து என்றும் சொல்லி கொடுத்தார்கள். அந்தஅனுபவத்தில் இருந்து பல அனுபவத்தை நாம் பெற்றதால் தான் நமக்கு கணிதம் புரிகின்றது.

அனுபவம் இல்லையென்றால் பத்து என்றால் என்ன என்றே புரியாது. இது போல் அனைத்து அறிவும் அனுபவத்தால் தான் நம்முள் வருகின்றது.

திருக்குறளை படித்து ஒப்பித்தவர்கள் அனைவரும் திருவள்ளுவர் அறிவை பெற்றது இல்லை. ஆனால் திருக்குறளைப் படிக்காத பலர் திருக்குறள் போன்ற நூலை எழுதக்கூடிய அளவுக்கு அறிவைப் பெற்று இருக்கின்றார்கள்.

பல மாணவர்கள் திருக்குறள் அனைத்தையும் தெளிவாக ஒப்பிப்பார்கள், ஆனால் அது என்ன என்று அவர்களுக்குப் புரியாது.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக”

என்று திருள்ளுவர் சொன்னது போல், ஒருவன் கற்க வேண்டிய நூல்களைக் குற்றமறக் கற்கவேண்டும். அவ்வாறு கற்றபிறகு அக்கல்விக்குத் தகுதியுடையவனாக நடக்க வேண்டும்.

ஒருவருக்கு அவர்கள் படித்தது அறிவை கொடுக்கவில்லை என்றால் அவர் படித்தது பயன் இல்லை என்று பொருள்.

படித்ததை நினைவில் வைத்துக் கொண்டு தேர்வில் மதிப்பெண் வாங்குவது என்பது அறிவின் வெளிப்பாடு அல்ல. அது நினைவாற்றலின் திறன். ஓவியம் வரைவது, நீளம் தாண்டுவது போல் இதுவும் ஒரு திறன் தானே தவிர அறிவைப் பெற்றதாக பொருள் அல்ல. ஒப்பித்தலை அறிவு என்று எண்ணாது திறமை என்று எண்ணுங்கள். இரண்டுக்கும் உள்ள நுட்பமான வேற்றுமையை புரிந்து கொள்ளுங்கள்.

மாணவர்களிடம் நினைவுத்திறனுடன் சிந்தனைத் திறனையும் வளர்க்க வேண்டும். நூறு ரூபாய் SD Card மூலம் ஒரு மாணவனின் நினைவுத்திறனைப் நாம் பெற்றுவிடலாம். ஆனால் அனுபவம் இல்லாமல் சிந்தனைத் திறனையும்,அறிவையும் எத்தனை கோடி கொடுத்தாலும் பெற முடியாது.

படித்தவன் என்றால் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும், ஆனால் இன்று அனுபவம் இல்லாமல் படித்தவர்கள் பலர் வழி தெரியாமல் என்ன செய்வது என்று தெரியாமல் நிற்கின்றார்கள்.

மரத்திலிருந்து பழைய இலைகள் உதிர்ந்து புதிய இலைகள் துளிர் விடுவது போல், பழைய கருத்துக்கள் நம்மிடமிருந்து உதிர்ந்தால் தான் புதிய கருத்துக்கள் நம்மிடம் துளிர்விட முடியும்.

வள்ளலார் அவர்களுக்கு தான் எழுதிய ஐந்து திருமுறைகளும் தவறு என்று தோன்றியதால் தான் ஆறாவது திருமுறையை எழுதினார், ஆறாவது திருமுறை எழுதியவுடன் இதற்கு முன்

எழுதிய ஐந்து திருமுறைகளையும் படிக்காதீர்கள் கொலுத்திவிடுங்கள் என்று சொல்லிவிட்டார், இதுவே வள்ளலாரின் அறிவு வளர்ச்சிக்கு சான்று.

ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய இறந்த காலத்தில் இருந்து மட்டுமே அறிவை பெறுவதால் காலமே அனைவருக்கும் அறிவை கொடுக்கின்றது. வள்ளலார் இன்னும் பத்துஆண்டுகள் இந்த உலகில் வாழ்ந்து இருந்தால் புதிய அறிவால் ஏழாவது திருமுறையையும் எழுதி ஆறாம் திருமுறையையும் தீயிட்டுக் கொளுத்த சொல்லியிருப்பார். வள்ளலாரை போல் உள்ளத் தூய்மை கொண்ட ஒருவரால்தான் தன்னுடைய பழைய கருத்துக்கள் தவறு என்று வெளிப்படையாக சொல்ல முடியும்.

மனிதனின் அறிவு வளர்ச்சியால் புதிய கண்டுபிடிப்புகள் வர வர பழைய கண்டுபிடிப்புகள் பயனற்றுப் போவது போல், முன்னோர்களின் பழைய கருத்துக்களும், கொள்கைகளும் உலகில் இருந்து மறைந்தால் தான் புதிய கருத்துகளும், கொள்கைகளும் துளிர் விட முடியும்.

பொருளாதாரத்திலும், கல்வியிலும், அறிவியலிலும் முன்னேற்றமடைந்து இருக்கும் நவீன உலகத்தில், நூறு ஆண்டுக்கு முன் வாழ்ந்த காந்தி, பெரியார்,அம்பேத்கார் போன்ற சமுதாய தலைவர்களின் கருத்துக்கள் அனைத்தையும் சரி என்று அரசியலுக்காக தாங்கிப் பிடிப்பது அறியாமை.

காந்தி, பெரியார், அம்பேத்கர் போன்ற சமுதாய தலைவர்கள் மேலும் 50 ஆண்டுகள் வாழ்ந்திருந்தால் புதிய அனுபவத்தால் புதிய அறிவைப் பெற்று தங்களுடைய கருத்தையும், கொள்கையையும் மாற்றிக்கொண்டு இருப்பார்கள். இந்த புரிதல் இல்லாமல் செக்குமாடு போல் பழைய கருத்துக்

குள்ளேயே சுற்றி வருவது அறிவு வளர்ச்சி அல்ல. தன்னுடைய பழைய கருத்திலிருந்தும், நம்பிக்கையில் இருந்தும் ஒருவர் விடுபட்டு சிந்தித்தால் தான் புதிய அறிவை உள்வாங்க முடியும்.

மாணிக்கவாசகர் —திருவாசகத்தில் அறிவு இல்லாதவரை கண்டு அஞ்சுவதாக பாடி உள்ளது, அவரும் நம்மைப் போலவே நமக்குத் தெரிந்தது மற்றவர்களுக்குத் தெரியவில்லை என்றால் அவர்களை அறிவு இல்லாதவர்களாகவே எண்ணி உள்ளார் என்பதையே அவருடைய பாடல் நமக்கு தெரியப்படுத்துகின்றது.

திருவாசகம் எழுதிய மாணிக்கவாசகருக்கே அறிவைப் பற்றிய புரிதல் இல்லாத போது, நாம் யாரை அறிவாளியாக பார்ப்பது? நமக்குத் தெரிந்தது மற்றவர்களுக்கு தெரியவில்லை, புரியவில்லை என்றவுடன் அவர்களை அறிவு இல்லாதவராக பார்க்கும் நாம், மற்றவர்களுக்கு தெரிந்தது நமக்கு தெரியவில்லை, புரியவில்லை என்றால் நமக்கு அறிவு இல்லை என்று எண்ணுவதற்கு மாறாக அவர்கள் சொல்வது தவறு என்று எண்ணுவதே இயல்பு.

நம்முடைய ஐந்து புலன்களின் அனுபவத்தால் மட்டும்தான் அறிவை பெற முடியும் என்ற அறிவை நூலாகப் பிடித்துக் கொண்டு பல ஆய்வுகளை செய்தேன். ஆய்வின் மூலம் எனக்கு கிடைத்த முடிவுகள்.

### 1) ஆணின் அறிவும், பெண்ணின் அறிவும் வேறு வேறு!

ஆணும், பெண்ணும், அறிவாலும், உணர்வாலும் இருவேறு உலகம், எனவே எந்த ஒரு மொழியாலும் அவர்களின் மெய் அறிவை பகிர்ந்து கொள்ளவே முடியாது,

இருவரின் மெய்யும் வேறு வேறு என்பதால், ஆணின் மெய் உணர்வை பெண்ணும், பெண்ணின் மெய் உணர்வை ஆணும் புரிந்து கொள்ளவே முடியாது.

ஒரு நிகழ்வு ஆணுக்கு கொடுக்கும் அறிவும், பெண்ணுக்கு கொடுக்கும் அறிவும் வெவ்வேறு என்பதால் ஆண் எடுக்கும் முடிவும், பெண் எடுக்கும் முடிவும் வேறுபட்டு தான் இருக்கும்.எனவே அறிவிலும்,திறனிலும் ஆணும், பெண்ணும் சமம் அல்ல என்பது அறிவியல் உண்மை.

ஆண்களின் இயல்பான உணர்வு சண்டை போடுவது, போட்டி போடுவது, மற்றவர்களை தன் ஆளுமையால் அடிமைப்படுத்துவது, ஆண் பிறப்பால் பெற்ற உணர்வு. அதனால் தான் ஆண்களுக்கு உணர்வை தூண்டக்கூடிய சண்டை, திகில், போட்டி போன்ற திரைப்படங்கள் பிடிக்கின்றன.

பெண்களின் இயல்பான உணர்வு குடும்ப கட்டமைப்பை உருவாக்குவது தான். எனவே குடும்பத்தின் உண்மையான உரிமையாளர் பெண்கள் தான். பெண்கள் பிறப்பால் தாய்மை உணர்வு கொண்டவர்கள், அதனால்தான் பெண்களின் உணர்வை தூண்டும் குடும்ப கதையை மையமாகக் கொண்ட நாடகத்தையும், திரைப்படத்தையும் விரும்பிப் பார்க்கின்றார்கள்.

பெண்ணின் தேவை ஆணிடமும், ஆணின் தேவை பெண்ணிடமும், இருந்தால் மட்டுமே ஆண், பெண் இருவரும் குடும்பமாக சேர்ந்து வாழ முடியும் என்பது இயற்கையின் நீதி. ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்வது அடிமைத்தனம் என்று தவறாக எண்ணி ஆணுக்கு நிகராக பெண்ணிடம்

செயற்கையாக அதிகாரத்தை குவிப்பது இயற்கைக்கு எதிரானது.

பெண்ணிடம் உரிமையை கொடுப்பதற்கும், தகுதி இல்லாதவர்களுக்கு இட ஒதுக்கீடு மூலம் அதிகாரத்தை குவிப்பதற்கும் வேற்றுமை உண்டு. ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் கல்வி உரிமை, வேலை வாய்ப்பு உரிமை, பேச்சுரிமை, ஜனநாயக உரிமை என்று அனைத்து உரிமையும் கொடுக்கலாம் அதில் எந்த தவறும் இல்லை. ஆனால் வேலை வாய்ப்புகலிலும், தேர்தலிலும் இட ஒதுக்கீடு அடிப்படையில் வேலைக்கு உறிய அறிவும், திறனும் இல்லாத பெண்களிடம் அதிகாரத்தை செயற்கையாக குவிப்பது இயற்கையின் நீதிக்கு எதிரானது.

பொது இடங்களில் பெண் காவலர்களுக்கு பாதுகாப்பாக ஆண் காவலர்கள் செல்வது எதார்த்தமாக இருந்தாலும், பெண்களை கையாள்வதற்கு பெண் காவலர்கள் தேவைதான். தேவைக்கு ஏற்ப பெண்களுக்கு வேலை கொடுப்பதில் எந்த தவறும் இல்லை, பெண்களின் பணியை ஆண்களால் திறம்பட செய்ய முடியாது என்பதை போல், ஆண்களின் பணியையும் பெண்களால் திறம்பட செய்ய முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

பெண்களால் திறன்பட செய்யக்கூடிய வேலையை பெண்களுக்கும், ஆண்களால் திறன்பட செய்யக்கூடிய வேலையை ஆண்களுக்கும் கொடுப்பதுதான் அறிவு. பொறியாளராக பெண்களும் படிக்கலாம் ஆனால் ஆண்களைப் போல் பெண்களால் களத்தில் பணி செய்ய முடியுமா என்றால், முடியாது என்பதுதான் கடந்த கால வரலாறு.IPS க்கு

பெண்களும் படிக்கலாம் ஆனால் ஆண்களுக்கு நிகராக திறன் வாய்ந்த காவல்துறை அதிகாரியாக களத்தில் செயல்பட முடியுமா என்றால் முடியாது.
பெண்ணால் ஒருபோதும் ஆணுடைய அறிவையும், உடல் திறனையும் பெற முடியாது என்பது இயற்கையின் நீதி. மனித உரிமையில் ஆணும், பெண்ணும் சமம். ஆனால் அறிவிலும், திறனிலும் ஆணும், பெண்ணும் சமம் அல்ல. இந்த வேற்றுமை தான் ஆணையும், பெண்ணையும் ஆயுள் முழுவதும் இனைத்து வைக்கின்றது.

**2) அறிவால் உயர்ந்தவரும் இல்லை, தாழ்ந்தவரும் இல்லை, அறிவால் அனைவரும் சமம்.**

நம் ஐந்து புலன்களால் பெறும் அனுபவமே அறிவு என்பதால், இந்த உலகில் எந்த ஒரு மனிதனின் அனுபவத்தையும் யார் ஒருவரும் முழுமையாக பெற முடியாது. எனவே யாருடைய அறிவையும் யாரும் முழுமையாக பெற முடியாது என்பதால், அறிவால் யாரும் யாரை விடவும் உயர்ந்தவர் இல்லை. அறிவில் நல்ல அறிவு, கெட்ட அறிவு என்று இருக்கின்றது, ஆனால் அறிவில் உயர்ந்த அறிவு, தாழ்ந்த அறிவு என்று எதுவும் இல்லை. எனவே அறிவால் அனைவரும் சமம்.

அறிவால் அனைவரும் சமம் என்ற அறிவு எனக்குள் வந்த பிறகு மற்றவர்களை நான் அணுகும் முறையே மாறிவிட்டது.

அறிவால் நான் யாரை விடவும் உயர்ந்தவன் அல்ல அதனால் அனைவரின் ஆலோசனையையும் கேட்பேன். யாரும் என்னை விட அறிவால் உயர்ந்தவர் அல்ல என்பதால் யாருடைய ஆலோசனையையும் ஆய்வு செய்யாமல் அப்படியே நான் ஏற்க

மாட்டேன்.என்னுடைய இந்த அணுகுமுறை எனக்கு பல புதிய அறிவை கொடுத்திருக்கின்றது.

**3) அறிவாளி என்று யாரும் இல்லை, அறிவு இல்லாதவர் என்றும் யாருமில்லை.**

அறிவாளி என்றும், அறிவு இல்லாதவர் என்றும் யாரையும் நாம் பிரிக்க முடியாது காரணம் அனுபவம் அனைவருக்கும் ஏதோ ஒரு அறிவை கொடுத்துக் கொண்டே தான் இருக்கின்றது.

கற்றது கையளவு, தள்ளாதது உலகளவு என்று ஔவையார் சொன்னது, நாம் அறிவாளி என்று சொல்லிக் கொள்வதற்கு நமக்கு எந்த தகுதியும் இல்லை என்பதையே வெளிப்படுத்துகின்றது.

**4) மனசாட்சி தனி மனிதனின் அறிவு ! நீதி சமுதாயத்தின் அறிவு!**

மனசாட்சி என்பது இறைவன் சாட்சிக்கு சமமானது, புனிதமானது, தவறு செய்யாதது என்று நாம் நினைப்பதால் மனசாட்சி அடிப்படையில் மனிதனுடைய நடவடிக்கைகள் இருந்தால், சரியாகவும், நேர்மையாகவும் இருக்கும் என்று எண்ணுகின்றோம், அது தவறு.

மனசாட்சி என்பது ஒருவன் பெற்ற அறிவு,அவனுடைய மனசாட்சியாக அவனிடம் உள்ளது. அவன் அறிவு எதை சரி என்று சொல்கிறதோ அது தீயவையாக இருந்தாலும் சரி, நன்மையாக இருந்தாலும் சரி, தான் செய்வதுதான் சரி என்று எண்ணுகின்றான். ஒருவனுடைய அறிவு வளர வளர அவன் மனசாட்சி மாறிக் கொண்டே இருக்கும்.

கொலை செய்கின்றவனும், கொள்ளை அடிப்பவனும் அவனுடைய மனசாட்சிக்கு சரி என்று தோன்றுவதால் தான் செய்கின்றான்.
தனி மனிதனுடைய அறிவு அவனுடைய மனசாட்சியாக இருக்கின்றது, சமுதாயத்தின் அறிவு சமுதாயத்தின் நீதியாக இருக்கின்றது.
என்னுடைய பார்வையில் குற்றவாளியைப் போல் சமுதாயமும் தவறான அறிவை பெற்று இருக்கின்றது அதனால் தான் குற்றம் செய்தவர்களுக்கு கடுமையான மரண தண்டனையை கொடுக்கின்றது நம் நீதி துறை.

**5) தூக்குத்தண்டனை அறிவற்ற சமுதாயத்தின் நீதி.**

நாம் எதைப் பார்க்கின்றோமோ, எதை கேட்கின்றோம், எதை உணர்கின்றோமோ, அது நம்மை, நம் அனுமதி இல்லாமலேயே ஆளும். நாம் எதைப் பார்க்க வேண்டும், எதைக் கேட்க வேண்டும், எதை உணர வேண்டும் என்பதை விதியின் பயனாகவே நாம் பெறுவதால்,குற்றவாளியின் செயலுக்கும், குற்றவாளியை தண்டிக்கும் நீதி அரசரின் செயலுக்கும் விதியே காரணமாக உள்ளது.

தொடர்வினை எனும் விதி நம்மை இயக்குவதால்,
ஏழையாக ஒருவன் வாழ்வதற்கு அவன் காரணமல்ல,
பணக்காரனாக ஒருவன் வாழ்வதற்கு அவன் காரணமல்ல,
குற்றவாளியாக ஒருவன் வாழ்வதற்கும் அவன் காரணமல்ல,
நீதி அரசனாக ஒருவன் வாழ்வதற்கும் அவன் காரணமல்ல என்பதை புரிந்து கொள்ளும் காலம் வரும்போது குற்றவாளியின் செயலுக்கு அவன் காரணமல்ல என்ற உண்மை புரியும்.
அப்போது குற்றவாளி தண்டனைக்கு உரியவன் அல்ல இந்த

சமுதாயத்தால் பாதிக்கப்பட்டவன் என்ற புதிய நீதி பிறக்கும். அதனால் தூக்கு தண்டனை ஒழியும்.சமத்துவம் மலரும்.

எந்த ஒரு நீதி அரசராவது என்னுடைய சிந்தனையும், செயலும் தொடர்வினை எனும் தத்துவத்துக்குள் இயங்கவில்லை என்று நிரூபித்தால், அவர்கள் குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை கொடுக்க தகுதி உள்ளவர்கள்.நிரூபிக்க முடியாதவர்கள் தூக்கு தண்டனை கொடுக்க தகுதி இல்லாதவர்கள்.

உண்மையிலேயே நீதி அரசர்கள் சத்தியத்தை மதிக்கிறார்கள், நம்புகின்றார்கள், அல்லது அஞ்சுகின்றார்கள் என்றால் என்னுடைய கேள்விக்கு பதில் சொல்லட்டும். இயற்கை எனும் கடவுள் நம்முடைய செயலை பார்த்துக்கொண்டே இருக்கின்றது எதிர்வினைக்காக என்ற பயம் நீதி அரசர்களுக்கு இருக்க வேண்டும்.

நம்முடைய சிந்தனையும், செயலும் நம் கட்டுப்பாட்டில் இல்லை என்ற அறிவை நாம் பெற்ற பிறகு குற்றவாளியின் செயலுக்கு குற்றவாளி தான் காரணம் என்று குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை கொடுப்பது எவ்வளவு பெரிய அநீதி.

தண்டனை குற்றத்தை குறைக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. குற்றவாளிக்கு கொடுக்கும் தண்டனை அவரை நல்லவராக மாற்ற வேண்டும், மாறாக குற்றவாளியை கொடுமைப்படுத்த கூடாது. காரணம் குற்றவாளி இந்த சமுதாயத்தால் பாதிக்கப்பட்டவர் என்பதால்.
ஒட்டுமொத்த மனித சமுதாயமும் குற்ற சமுதாயம் தான். இந்த சமுதாயம் மாற வேண்டும் என்றால் நம்முடைய செயலுக்கு தொடர்வினையே காரணம் என்ற புதிய அறிவோடு புதிய நீதியை உருவாக்க வேண்டும்.

அறிவு இல்லாமல் அறிவை புரிந்து கொள்ள முடியாது என்ற என்னுடைய ஆய்வின் முடிவை மெய்ப்பிக்கும் வகையில், ஊமை கனவு கண்டதுபோல், செவிடன் காதில் சங்கு ஊதியது போல், நான் எழுதி 13 ஆண்டுகள் கடந்தும், அறிவைப் பற்றியப் புரிதலை, என்னால் இந்த சமுதாயத்தில் ஏற்படுத்த முடியவில்லை என்பதை எண்ணும்போது வேதனையாக உள்ளது.

ஒவ்வொரு நாளும் அறிவாலும், உணர்வாலும் புதிய மனிதனாய் நாம் பிறக்கின்றோம், நாம் பிறக்கும் போதே அனைத்து உணர்வையும் பெற்று பிறப்பதில்லை, நாம் பிறக்கும் போது வலி என்ற ஒரு உணர்வை மட்டுமே பெற்று பிறக்கின்றோம். முதலில் பசி என்ற உணர்வை பெறுகின்றோம், சிறிது காலம் கழித்து பய உணர்வை பெறுகிறோம், அதைத் தொடர்ந்து நான் என்ற உணர்வை பெறுகிறோம், இந்த நான் என்ற உணர்வை பெற்ற பிறகுதான் போட்டி, போறாமை, பாசம், நட்பு, அன்பு, வெறுப்பு, போன்ற பல உணர்வுகளை பெறுகின்றோம். இறுதியாக காம உணர்வை பெறுகிறோம். வயது முதிர்ச்சியில் இறுதியாக பெற்ற காம உணர்வை முதலில் விடுகின்றோம், அதைத் தொடர்ந்து போட்டி, போறாமை, வெறுப்பு, போன்ற உணர்வுகளையும் விட்டுவிடுகின்றோம், கடைசியாக முதலில் பெற்ற பசி என்ற உணர்வையும் விட்டு விடுகின்றோம், மரணத்தின்போது பிறக்கும்போது வந்த வலி என்ற உணர்வையும் விட்டு விடுகின்றோம்.

நம்முடைய செயலுக்கு அடிப்படை, பிறப்பால் நாம் பெற்ற உணர்வுகளே காரணம். உணர்வு ஒருவருக்கு ஒருவர் அளவில் மாறுபட்டு இருக்கு, அதற்கு ஜீன்தான் காரணம். ஒருவருக்கு பசி அதிகம் இருக்கு, மற்றொருவருக்கு வீரம் அதிகம் இருக்கு,

வேறு ஒருவருக்கு காமம் அதிகம் இருக்கு, இதை அவரவர்கள் பெற்ற அறிவால், மூளையின் செயல்திறனால் அவர்களின் உணர்வை அடக்கினால் ஒழுக்கமானவர்களாக வாழ்வார்கள்.

நம் மூளை ஒரு தராசு போன்றது ஒரு தட்டில் நம் ஐந்து புலன்கள் மூலம் பெற்ற அறிவை சேகரித்து வைத்துக்கொள்ளும், மற்றொரு தட்டில் பிறப்பால் நாம் பெற்ற உணர்வை வைத்து கொள்ளும். நாம் ஒரு செயலைச் செய்யவேண்டும் என்று விரும்பினால், உணர்வு ஒரு தட்டில் விருப்பத்திற்கு தகுந்த அழுத்தத்தை கொடுக்கும், அறிவு அதற்கு எதிர்வினையாக அது சேர்த்து வைத்துள்ள தகவலிலிருந்து தேவையான அழுத்தத்தை மற்றொரு தட்டில் கொடுக்கும் அப்போது எதனுடைய அழுத்தம் அதிகமாக உள்ளதோ, அதை சார்ந்த நடவடிக்கையை செய்ய மூளை உத்தரவிடும், இதுதான் மூளையின் செயல். இதன்படி தான் நாம் அனைவரும் இயங்குகின்றோம்.

உணர்வுதான் எப்போதும் செயலுக்கான விருப்பத்தை மூளைக்கு தெரிவிக்கும், அறிவு எப்போதும் உணர்வை கட்டுப்படுத்தி கொண்டேதான் இருக்கும், மூளை விருப்பு வெறுப்பு இல்லாத இயந்திரம், தீர்ப்பை வாதத்தின் அடிப்படையிலேயே சொல்லும். வாதம் தவறாக இருந்தால் தீர்ப்பும் தவறாகவே இருக்கும், உணர்வின் விருப்பத்தை அறிவு சரி என்று ஏற்றுக் கொண்டால் மூளையால் உணர்வின் செயலை தடுக்க முடியாது.

சிந்தித்தல் என்பதன் பொருள் மூளையில் சேகரித்து வைத்துள்ள அறிவை தேடி எடுத்து உணர்வுக்கு எதிர்த் தட்டில் வைத்து எடை போடுவது தான்.

மூளையின் செயல் இரண்டு, ஒன்று அனுபவங்களை சேகரித்து வைத்துக் கொண்டு தேவைப்படும் போது உடனே நினைவு படுத்துவது. இரண்டாவது அறிவையும், உணர்வையும் துல்லியமாக எடை போடுவது. இந்த இரண்டையும் மூளை சரியாக செய்தல் என்பது மூளையின் திறன், இதற்கும் ஜீன் தான் காரணம்.

பிறப்பால் நாம் பெற்ற உணர்வுகளும், மூளைத்திறனும், வாழ்நாள் முழுவதும் யாருக்கும் இப்போது இருப்பது போலவே எப்போதும் இருக்காது, வயது ஆக, ஆக, உணர்வுகளும், மூளைத்திறனும், மாறிக்கொண்டேதான் இருக்கும். இதைஅறியாத ஆட்சியாளர்களும், நீதித்துறையும், குற்றங்களை செய்தவன் வாழ்நாள் முழுவதும் திருந்த மாட்டான் என்று எண்ணி தூக்கு தண்டனை கொடுப்பதும், பல வருடங்கள் சிறையில் அடைப்பதும் எவ்வளவு பெரிய அறிவற்ற செயல் என்று எண்ணிப் பாருங்கள். எந்த ஒரு குற்றம் செய்தவனுக்கும் பத்து ஆண்டுக்கு மேல் தண்டனை தேவையற்றது. காரணம் பத்து ஆண்டுகளுக்குள் ஒருவனை அவனுடைய உணர்வும், அறிவும், புதிய மனிதனாக மாற்றி விடும்.

20 வயதில் அப்பாவின் செயல் தவறு என்று நினைத்தவனுக்கு, முப்பது வயதில் தனக்கு ஒரு குழந்தை பிறந்ததும் அப்பாவின் செயல் சரியாக தெரியும்.

பிறந்தவுடன் தாய் பாலுக்கு ஆசைப்படுகின்றோம், இரண்டு வயதில் விளையாட்டு பொருளுக்கு, ஐந்து வயதில் விளையாட்டுக்கு, 15 வயதில் ஸ்மார்ட்போனுக்கு, 20 வயதில் காதலுக்கு, 25 வயதில் செல்வத்திற்கு, 30 வயதில் புகழுக்கு என்று நம்முடைய ஆசைகள் மாறிக் கொண்டேதான்

இருக்கின்றது, இதற்குக் காரணம் நம்முள் ஏற்படுகின்ற உணர்வு மாற்றமே, உணர்வின் மாற்றமே ஆசைக்கு காரணம், ஆசையே குற்றம் செய்ய காரணம், ஒன்றின் மேல் ஆசை குறையும் போது புதிய மனிதன் நம்முள் பிறக்கின்றான்.இது வாழ்வியல் உண்மை.

இந்த அறிவியல் உண்மையை மத்திய அரசும், நீதித்துறையும் புரிந்து கொள்ளாமல் குற்றவாளிகளுக்கு தண்டனை கொடுப்பது அறிவற்ற செயல். எனவே உச்ச நீதிமன்றம் இந்தியாவில் தூக்கு தண்டனையை தடை செய்து 10 ஆண்டுக்கு மேல் சிறையிலுள்ள அனைவரையும் விடுதலை செய்ய மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கு உத்தரவு இடவேண்டும்.

# ஏழாவது அறிவு

இயற்கை எனும் கடவுள் எனக்கு கொடுத்த ஐந்தாவது வரம் ஏழாவது அறிவு.

நம் அறிவுக்கு எதை தெரியப்படுத்த வேண்டும்,எதை தெரியப்படுத்தக் கூடாது என்பதை அறிந்து அறிவை அறிவால் ஆளுமை செய்வதுதான் ஏழாவது அறிவு.

நாம் அறிவை நம்முடைய ஐந்து புலன்களின் அனுபவத்தாலும், அனுபவம் சார்ந்த தகவல்களாலும் தான் அறிவை பெற முடியும்.நாம் பெற்ற அறிவு நம்முடைய அனுமதி இல்லாமலேயே நம்மை ஆளுமை செய்யும் நம்முடைய சிந்தனையும், செயலும் நம்முடைய அறிவையும் உணர்வையும் சார்ந்தே இருப்பதால் இதிலிருந்து யாரும் விடுபட்டு இயங்கமுடியாது. நமக்குள் ஒரு அறிவு வந்துவிட்டால் அது நமக்குத் தெரிந்தும், தெரியாமலும் நம்மை உயிருள்ளவரை இயக்கிக் கொண்டுதான் இருக்கும்.

மருத்துவர் நம் கையில் மருந்தை கொடுத்துவிட்டு இந்த மருந்தை குரங்கை நினைக்காமல் சாப்பிட்டால்தான் மருந்து வேலை செய்யும் என்று சொல்லிவிட்டால், மருந்தை சாப்பிடலாம் என்று கையில் எடுத்தாலே குரங்கு ஞாபகம் வந்துவிடும். மருந்தை உட்கொள்ளும் பொழுது குரங்கை நினைக்க கூடாது என்ற அறிவு நம்மை கேட்காமலேயே வேலை செய்வது போல் நாம் பெற்ற அனைத்து அறிவும் அப்படித்தான் நம்மை கேட்காமலேயே வேலை செய்யும், நம்மை ஆளுமை செய்யும். இதிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது.

குரங்கை நினைக்க கூடாது என்ற தேவையில்லாத அறிவு நம்முடைய செயலை தடுத்தது போல், நாம் பெற்றிருக்கும் பல தேவையில்லாத அறிவுகள் நம்முடைய இன்பத்தையும்,முன்னேற்றத்தையும் சீர்குலைக்கின்றன. இதை நம்முடைய அறிவால் புரிந்து, உணர்வின் ஆளுமை இல்லாமல், எந்த அனுபவத்தை மட்டும் பெற வேண்டும், எந்த தகவலை மட்டும் பெற வேண்டும் என்பதை தேர்வு செய்து அதை மட்டும் நம் அறிவுக்கு (புலன்களுக்கு) தெரியப்படுத்துவது தான் ஏழாவது அறிவு.

வாழ்க்கையில் நாம் இன்பமாக, ஆனந்தமாக வாழ வேண்டும் என்பது உணர்வின் தேவை. இந்த உணர்வை பூர்த்தி செய்து கொள்ள அறிவு தேவைப்படுகின்றது. அறிவு என்பது அனுபவத்தாலும், அனுபவம் சார்ந்த தகவலை பெறுவதாலும் நமக்கு கிடைக்கின்றது.

உணர்வு என்பது இன்பம், துன்பம், ஆசை, கௌரவம்,பொறாமை,பசி,வலி,நான் இவைகள் அனைத்தும் மனிதர்களுக்கு இயல்பானவை.நாம் சுவாசிப்பது எப்படி யாரும் சொல்லிக் கொடுக்காமலேயே நடக்கின்றதோ அதுபோல் இந்த உணர்வுகளும் யாரும் சொல்லிக் கொடுக்காமலேயே நம்மை ஆளுகின்றன.

ஒருவரிடம் இன்பமான, ஆனந்தமான வாழ்க்கையை வாழ்வதற்கு ஆசைப்படு அல்லது கனவு காண் என்று சொல்வது அவசியமற்றது.ஏனென்றால் அது ஒவ்வொரு மனிதனின் இயல்பான உணர்வு, அந்த இன்பமான உணர்வை ஒருவர் எப்படி பெறுவது, அடைவது என்பதற்க்கு தான் நாம் அறிவை கொடுக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய லட்சியத்தை அடைவதற்கு தேவையான அறிவு ஏழாவது அறிவு.

கனவு காண் அல்லது அனைத்துக்கும் ஆசைப்படு என்று சொல்லி உணர்வை தூண்டும் ஆசை வார்த்தை அறிவாகாது,ஆனால் இந்த உலகம் இதைச் சொன்னவர்களை தான் அறிவாளியாக பார்க்கின்றது.

உணர்வின் கடிவாளம் அறிவு.

ஒரு மனிதன் அறிவால் உயர்ந்து நிற்பது, தான் படித்த படிப்பிலும், தான் எழுதிய எழுத்திலும், தான் பேசிய பேச்சிலும் இல்லை. அறிவால் உணர்வை ஆளுமை செய்து வாழ்கின்ற வாழ்க்கையில்தான் உள்ளது.

ஒருவனுடைய அறிவின் வெளிப்பாடு அவன் உணர்வுகளை கட்டுப்படுத்துவதில் தான் வெளிப்படுகின்றது.

இளைஞர்களை பார்த்து ஒழுக்கமாக வாழ வேண்டும் என்று உபதேசம் செய்வது மிக எளியது, ஆனால் இதுவரை யாரும் அறிவால் உணர்வுகளை எப்படி ஆளுமை செய்து ஒழுக்கமாக வாழ்வது என்ற அறிவை இளைஞர்களுக்கு தெளிவாக கற்றுக் கொடுக்கவில்லை. அந்த குறையை போக்கவே இந்த பதிவு.

உணர்வு கட்டுக்கடங்காத குதிரை, அந்தக் குதிரையின் மீது பயணிப்பது தான் வாழ்க்கை. இந்த வாழ்க்கையில் நாம் பெற்ற அறிவு தான் அந்த உணர்வு என்ற குதிரையை ஜாக்கியைப்போல் சாதுரியமாக இயக்கவேண்டும்.

குதிரையில் பயணிப்பதற்கு, குதிரைக்கு கடிவாளம் போடுவது போல், வாழ்க்கையில் பயணிக்க உணர்வுக்கு முதலில் கடிவாளம் போட வேண்டும். கடிவாளம் இல்லாத குதிரைப் பயணம் இலக்கை அடையாது என்பதை போல்,

அனைத்துக்கும் ஆசைப்படுபவன் வாழ்க்கையும் ஒழுக்கமான வாழ்க்கையாக இருக்காது.

உணர்வுகளுக்கு கடிவாளம் போட வேண்டுமென்றால், அறிவை அறிவால் ஆளுமை செய்யும் ஏழாவது அறிவால் தேவையில்லாத்தை பார்ப்பதையும், கேட்பதையும், உணர்வதையும், தவிர்க்க வேண்டும்.

உணர்வுக்கு கடிவாளம் போட்டவர்களுடன் பழகினாலே போதும், உங்கள் உணர்வுகள் தானாகவே கடிவாளங்களை போட்டுக்கொள்ளும்.

வரவுக்கு தகுந்தாற் போல் நம்முடைய தேவைகள் இருக்கவேண்டும். வரவுக்குமேல் தேவைகள் இருந்தால் ஒழுக்கத்தை மீற, உணர்வுகள் தூண்டும்.

நம்முடைய தேவைகள் உணர்வின் வெளிப்பாடாக இருப்பதால், அந்த தேவைகளால் கிடைக்கக்கூடிய இன்பத்தை, உணர்விற்கு தெரியப்படுத்தாமல், அல்லது தொடர்ந்து உணர்விற்கு பழக்கப்படுத்தாமல் தவிர்க்க வேண்டும்.

மது அருந்தாத வரை உணர்விற்கு (புலன்களுக்கு) மதுவின் இன்பம் தெரியாது. மதுவின் உணர்வு தெரியாத நிலையில், உணர்வை அடக்க வேண்டிய தேவையும் இருக்காது.

கற்பு என்பது ஆண், பெண், இருவருக்கும் பொதுவான பாலுணர்வு கடிவாளம்.
மனைவியுடன் மட்டுமே வாழ்பவன் மனைவியிடம் எந்த குறை இருந்தாலும் அது அறியாமலேயே மனநிறைவோடு வாழ்க்கையை வாழ்கின்றான்.பல பெண்களுடன் வாழ்பவனுக்கு எந்த குறையும் இல்லாத மனைவி அமைந்திருந்தாலும், மன

நிறைவு பெறாமல்,உணர்வை வசப்படுத்த முடியாமல் வயதான பிறகும், பல பிரபலங்களை போல் மானத்தை இழக்கின்றான்.

உணர்வை அடக்குவதற்கும், வசப்படுத்துவதற்கு, வேறுபாடு உண்டு. அனைத்து உணர்வுகளையும் உணர்வுக்கு பழக்கப்படுத்தி விட்டு, உணர்வை அடக்குவது என்பது, நான்கு புறமும் பார்க்கும் கடிவாளம் போடாத குதிரையில் பயணிப்பதற்க்கு சமம்.
உணர்வை வசப்படுத்துவது என்பது, உணர்வுக்கு தேவையில்லாத உணர்வுகளை பழக்கப்படுத்தாமல், (புலன்களுக்கு தேவை இல்லாத அறிவை கொடுக்காமல்) நாம் நினைக்கின்ற பாதையில் பயணிப்பதே வசப்படுத்துவது ஆகும்.

உணர்வு என்ற குதிரைக்கு கடிவாளம் போடாமல் பயணிப்பவர்கள் ஒழுக்கம் இல்லாதவர்கள்.

கடிவாளம் போட்ட உணர்வு என்ற குதிரையை மரத்தில் கட்டி வைத்து விட்டு, பயணிக்காமல் இருப்பவர்கள் வாழத் தெரியாத துறவிகள்!

கடிவாளம் போட்ட உணர்வு என்ற குதிரையில் பயணிப்பவர்கள் தான், இந்த வாழ்க்கையை முழுமையாக அனுபவிப்பவர்கள்.

இன்பம் என்பது நிறைவில் உள்ளது, நிறைவு என்பது எண்ணிக்கையில் அல்ல, நம் உணர்வில் உள்ளது.

உணர்வை வசப்படுத்துவோம் !
இன்பமாக வாழ்வோம்!

# ஆறாவது அறிவு

என்னுடைய நீண்ட நாள் தவத்தால் இயற்கை எனும் கடவுள் எனக்கு அற்புதமான வரங்களை கொடுத்தார் அதில் ஆறாவது வரம், ஆறாவது அறிவைப் பற்றிய அறிவு.
இந்த அறிவை நான் பெற்ற பிறகு ஸ்கேன் இயந்திரம் போல் ஒரு மனிதரிடம் நான் பழகினால் அவர் ஐந்து அறிவில் செயல்படுகின்றாரா, ஆறாவது அறிவில் செயல்படுகின்றாரா அல்லது ஏழாவது அறிவை பயன்படுத்துகின்றாரா என்று எனக்கு தெரிந்து விடும்.

அறிவை நம் ஐந்து புலன்களின் அனுபவத்தால் மட்டுமே பெற முடியும், ஐந்து புலன்களும் நம்முடைய ஐந்து அறிவுகள், ஐந்து புலன்களின் அறிவு இல்லாமல் படிப்பதாலோ, கேட்பதாலோ நாம் பெரும் தகவல்கள் ஒருபோதும் அறிவாக மாறாது. தகவல் தகவலாக மட்டுமே நம்மிடம் இருக்கும்,அறிவாக இருக்காது.

“ஆறாவது அறிவு என்பது நான் என்ற உணர்விலிருந்து விடுபட்டு விறுப்பு, வெறுப்பு இல்லாமல் புதிய அறிவை உள்வாங்கிக் கொள்வது “,
உணர்வில் இருந்து விடுபட்டு அறிவின் ஆளுமையில் நாம் இருக்கும்போது தான் ஆறாவது அறிவு செயல்படும்.

பகுத்தறிவு என்பது சிந்தித்து செயல்படுவது என்று பொருள், ஆறாவது அறிவு என்பது உணர்விலிருந்து விடுபட்டு சிந்திப்பது என்று பொருள்.
உணர்வில் இருந்து விடுபட்டு ஆறாவது அறிவில் செயல்படுபவர்கள் இங்கு. 01% சதவிகிதம் தான், மீதம் உள்ள

99.9% சதவிகித மக்கள் அனைவரும் ஐந்து அறிவை மட்டும் தான் பெற்றுள்ளார்கள். ஐந்தறிவு மனிதனும், மிருகமும் ஒன்று.

சிந்தித்து செயல்படுவது என்பதை ஐந்தறிவு மிருகமும் செய்கின்றது. எனவே பகுத்தறிவு என்பது ஆறாவது அறிவு அல்ல. உணர்வை, அறிவால் கட்டுப்படுத்தி பெரும் ஆறாவது அறிவால்தான் மிருகத்திடமிருந்து மனிதன் உயர்ந்து இருக்கின்றான்.

படிப்பதற்கும், பட்டங்கள் வாங்குவதற்கும், ஐபிஎஸ், ஐஏஎஸ், டாக்டர் ஆவதற்கும், நாட்டை ஆள்வதற்கும் ஆறாவது அறிவு தேவையில்லை. ஒழுக்கமாக வாழ்வதற்கும்,நீதியோடு வாழ்வதற்கும் தான், உணர்வை ஆளுமை செய்யக்கூடிய ஆறாவது அறிவு தேவைப்படுகின்றது.

உயர் பதவியில் இருக்கும் பலர் ஆறாவது அறிவில் செயல்படாததால் தான் லஞ்சம் வாங்குகின்றார்கள், ஊழல் செய்கின்றார்கள், மது அருந்துகின்றார்கள், ஆண், பெண் உறவில் ஒழுக்கத்தை மீறுகின்றார்கள். ஒழுக்கமான, நேர்மையான மனிதர்கள் தான் ஆறாவது அறிவை பெற்றுள்ள உண்மையான ஆறுஅறிவு மனிதர்கள்.

ஒழுக்கம் இல்லாத, நேர்மை இல்லாத மனிதர்கள் நாட்டையே ஆள்பவராக இருந்தாலும் அவர்கள் ஐந்தறிவு மிருகத்துக்கு சமமானவர்கள்.

அறிவால், உணர்வை ஆளுமை செய்ய கூடியவர்கள் தான் ஆறறிவு மனிதர்கள்.அதிக நேரம் உணர்வை, அறிவால் ஆளுமை செய்வது ஞானிகள் தான். உணர்விலிருந்து விடுபட்டு

ஞானநிலையில், சமநிலையில் நாம் இருக்கும் போது தான் ஆறாவது அறிவின் மூலம் நாம் பல அறிவை பெற முடியும்.

நான் ஆறாவது அறிவின் மூலம் பெற்ற அறிவை இறைவன் எனக்கு கொடுத்த வரமாக பார்க்கின்றேன்.
ஆறாவது அறிவை பெறுவதற்க்கு அரசியல் தலைவர்களும், உயர்பதவியில் இருப்பவர்களும் பயிற்சி எடுத்துக் கொண்டால் நேர்மையானவர்களாக, ஒழுக்கமானவர்களாக, மகான்களாக நிச்சயம் மாறி விடுவார்கள்.மக்கள் மகான்களாக மாறிவிட்டால் நம் பூமி எப்படி இருக்கும் என்று எண்ணும் போது ஆனந்தமாக உள்ளது.

நான் பெற்று இருக்கும் அறிவு இந்த உலகில் அறிவில் எந்த உயரத்தில் யார் இருந்தாலும் அவர்களுக்கும் தேவையான அறிவு.

என்னுடைய எழுத்தை தொடர்ந்து படிக்கும் சிலர் அதன் வலிமையை புரிந்து, இதுபோன்ற எழுத்தை யாரும் இதுவரை எழுதியதில்லை. இப்படி எல்லாம் புதியதாக மாறுபட்ட கோணத்தில் உங்களால் எப்படி யோசிக்க முடிந்தது என்று என்னை புகழும்போது நானும் அனைவரையும் போல் ஒரு கணம் ஆனந்தத்தில் திளைத்து போனாலும் மறு கணம் சிந்திக்க தொடங்கி விட்டேன் காரணம் என்னுடைய செயலுக்கு நான் காரணமல்ல என்பதை நான் உணர்ந்ததாலும், அறிவால் யாரும் யாரையும்விட உயர்ந்தவர்கள் இல்லை என்ற புரிதல் என்னிடம் இருந்ததாலும் இதற்கான காரணத்தை அறிவு தேட ஆரம்பித்துவிட்டது.

சிறு வயதில் யாரும் முகமூடியை அணிந்து கொள்வதில்லை, வயது ஆக, வயதுஆக, இந்த சமுதாயத்தில் வாழ வேண்டும்

என்றால் கட்டாயம் ஒன்று அல்லது பல முகமூடிகளை பயன்படுத்த வேண்டியது அவசியமாகின்றது. 90% பேர் முகமூடியை தெரிந்தோ அல்லது தெரியாமலோ பயன்படுத்தி தான் வாழ்கின்றார்கள்.பத்து சதவிகிதம் பேர் மட்டும்தான் சொந்த முகத்தோடு வாழ்கின்றார்கள்.

பல முகமூடிகள் இருந்தாலும் சில முகமூடிகளையே பலரும் பயன்படுத்துகின்றார்கள், குறிப்பாக அரசியல், மதம், சாதி, ஆத்திகம், நாத்திகம், முற்போக்குவாதி, பகுத்தறிவாளி, ஆன்மீகவாதி, கல்வியாளர், நேர்மையாளர், என்று பலரும் முகமூடியை பயன்படுத்துவதற்கு காரணம், மற்றவர்களை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல, அதை மாட்டிக் கொண்டால் தான் இந்த சமுதாயத்தில் வாழ முடியும் என்ற சூழல் இருப்பதால் தான் அனைவரும் அவர்களுக்கு பொருத்தமான, விருப்பமான முகமூடியை தேர்ந்தெடுத்து அணிந்து கொள்கிறார்கள்.இந்த முகமூடியை போட்டுக் கொண்ட பிறகு முகமூடியாகவே தன் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்கின்றார்கள்,
முகமூடியால் உயர்ந்தவர்களும் உண்டு, தாழ்ந்தவர்களும் உண்டு.

அரசியல், மதம், சாதி, ஆத்திகம், நாத்திகம், என்று இவைகளை சாராமல் யார்ஒருவரும் இல்லை என்பதால் அனைவரும் முகமூடி அணிந்து உள்ளார்கள் என்று பொருளல்ல.

கட்சி சார்பு இல்லாமல் தேர்தலுக்கு, தேர்தலில் தான் விரும்பிய அரசியல் கட்சிக்கு ஓட்டு போட்டால் முகமூடியை அணிந்து கொள்ளவில்லை என்று பொருள். ஆனால் தன்னுடைய நலனுக்காக, பாதுகாப்புக்காக, ஒரு கட்சியை சார்ந்து

அதையே ஆதரிப்பது என்பது முகமூடியை அணிந்து கொண்டதாக பொருள்.

சாதி, மத சார்பு இல்லாமல் யாரும் இல்லை, ஆனால் சுயநலத்திற்காகவும், சமுதாயத்தில் பாதுகாப்புக்காகவும், சாதி மற்றும் மதவாதியாக தன்னை அடையாளப்படுத்திக் கொள்வது என்பது முகமூடியை அணிந்து கொண்டதாக பொருள்.

ஒருவர் ஆத்திகராக அல்லது நாத்திகராக இருப்பது என்பது அவருடைய நம்பிக்கையை பொருத்தது, இது அவரின் சொந்த முகம். ஆனால் தன்னுடைய நம்பிக்கையை சுயநலத்திற்காக ஒத்த கருத்துடையவர்கள் ஒன்றுசேர்ந்து தன்னுடைய அடையாளமாக சமுதாயத்திற்கு காட்டினால் அது முகமூடி அணிந்து கொண்டதாக பொருள்.

ஒருவர் நேர்மையாக இருப்பது என்பது அவரின் இயல்பான முகமாக இருக்கலாம் ஆனால் அரசு அதிகாரிகளோ அல்லது பிரபலமானவர்களோ தன்நேர்மையை தன்னுடைய அடையாளமாக வைத்துக்கொண்டு சுயநலனுக்காக ஒரு அமைப்பை உருவாக்கி அதன் மூலம் உயர் பதவியை அடைய நினைத்தால் அது முகமூடி போட்டுக் கொண்டதாக பொருள்.

நாம் நம்முடைய கண், காது, மூக்கு, வாய் மற்றும் மெய் என ஐந்து புலன்களால் மட்டுமே அறிவைப் பெற முடியும் என்ற நிலையில், நம் புலன்களை முகமூடி போட்டு மூடிக் கொள்வதால் நாம் பெறக்கூடிய அறிவு தடைபட்டு புதிய அறிவும், புதிய சிந்தனையும் நமக்குள் வருவதை இந்த முகமூடிகள் தடுத்து விடுகின்றன இதனால் மற்றவர்களின் மாற்றுக் கருத்தை முகமூடி அணிந்து கொள்பவர்கள் புரிந்து கொள்ள முடிவதில்லை.

அரசியல், மதம், சாதி, ஆத்திகம், நாத்திகம், முற்போக்குச் சிந்தனையாளர், பகுத்தறிவாளி, ஆன்மீகவாதி, கல்வியாளர், நேர்மையாளர், என்று எந்த முகமூடியையும் நான் அணிந்து கொள்ளாததாலும்,எந்த உணர்வுக்குள்ளும் நான் சிறைப்பட்டு இல்லாததாலும் தான் புதிய சிந்தனைகள் என்உள்ளே ஐந்து புலன்களின் மூலம் தங்கு தடை இல்லாமல் வந்தடைகின்றது. உணர்வில் இருந்து விடுபட்டு சிந்திக்கும் போது தான் ஆறாவது அறிவு நமக்கு புதிய அறிவை கொடுக்கின்றது,இதனால்தான் என்னுடைய எழுத்துக்கள் புதிய சிந்தனையின் வெளிப்பாடாக உள்ளது.

அரசியல் தலைவர்கள், ஆன்மிகவாதிகள், நாத்திகர்கள், எழுத்தாளர்கள், என அனைவரும் தனக்கென ஒரு முகமூடியை வடிவமைத்து போட்டுக் கொள்வதால், அவர்களை பின்தொடர்பவர்களும் அதே முகமூடியைப் போட்டுக் கொண்டு சுயநலத்திற்காக அவர்களின் பின் பயணிக்கின்றார்கள்.

எனக்கு என்று எந்த முகமூடியையும் நான் தேர்வு செய்யாததால் எனக்கு முகமூடி அணிந்த வாசகர்கள் யாரும் இல்லை. காரணம் முதல் நாள் நான் ஆன்மிகம் சார்ந்து எழுதினால் ஆன்மீக முகமூடி போட்டவர்கள் பாராட்டுவார்கள், அடுத்தநாள் நாத்திகம் சார்ந்து எழுதினால் நான் அந்நியன் என்பதை உணர்ந்து ஆத்திகர்கள் என்னை பின்தொடர மாட்டார்கள், விலகி விடுவார்கள். இது போல் சாதி சமத்துவத்தைஆதரித்தும்,மறுபுறம் சாதியை ஆதரித்து முரண்பாடாக புதிய சிந்தனையில் எழுதியதால் சாதி பற்றாளர்களும் முற்போக்குவாதிகளும் என்னை பின்பற்றுவதில்லை. மற்றும் நேர்மை என்ற முகமூடியை அணிந்து கொண்டு மக்களை ஏமாற்ற நினைப்பவர்களின்

முகமூடியைக் கிழித்து உண்மை முகத்தை காட்டுவதால் நேர்மையாளன் என்ற முகமூடி போட்டு கொண்டிருப்பவர்கள் என் எழுத்தை பின்பற்றுவதில்லை.

பெரும்பாலான எழுத்தாளர்கள் தனக்கென ஒரு முகமூடியை தேர்ந்தெடுத்து அணிந்து கொள்வதால் மட்டும் தான் தனக்கென ஒரு முகமூடி வாசகர்கள் கூட்டத்தை கூட்டமுடிகின்றது. என்னுடைய குறிக்கோள் என்னுடைய எழுத்துக்கு ஆதரவாக முகமூடி போட்ட வாசகர்களை ஒன்று திரட்டுவது அல்ல, முகமூடி அணிந்துள்ள வாசகர்கள் தானாக முன்வந்து முகமூடியை கழட்ட வேண்டும் என்பதுதான்.

பறவைகள் தன் எச்சத்தின் மூலம் பூமி எங்கும் விதையை விதைப்பதை தன்னுடைய கடமையாகவோ அல்லது பணியாகவோ எண்ணி செய்வதில்லை, அதுபோல் தான் என்னுடைய கருத்தும் விதைக்கப்படுகிறது தரமான விதையாக இருந்து தகுதியான மண்ணில் விழுந்தால் மக்களுக்கு பயன்தரும்.

பொதுநலத்தில் சுயநலம் இல்லை என்றால் முகமூடி எதற்கு?

முகமூடி போட்ட வாழ்க்கை பலன் தரக்கூடிய வாழ்க்கையாக இருக்கலாம், ஆனால் முகமூடி அணியாத வாழ்க்கையில் தான் ஆறாவது அறிவைப் பெற்ற மனிதனாக வாழ முடியும்.